# வணிக மற்றும் மனித உரிமைகளின் வழிகாட்டு கொள்கைகள்

ஐக்கிய நாடுகளின் “பாதுகாத்தல், மதிப்பு மற்றும் தீர்வு” கட்டமைப்பை செயல்படுத்துதல்



தற்போதைய படைப்பு அதிகாரப்பூர்வமற்ற மொழிபெயர்ப்பாகும், இதற்கு வெளியீட்டாளர் முழுப் பொறுப்பையும் ஏற்கிறார். துல்லியத்தை உறுதிப்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டாலும், எந்தவொரு அதிகாரப்பூர்வ பயன்பாடு அல்லது மேற்கோளுக்கும் அசல் ஆங்கில பதிப்பைப் பார்க்குமாறு வாசகர்கள் பரிந்துரைக்கிறோம். இந்த வெளியீடு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ஆசியாவில் வணிகம் மற்றும் மனித உரிமைகளின் கீழ் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தால் செயல்படுத்தப்பட்ட பாதுகாப்பு, மரியாதை மற்றும் தீர்வு கட்டமைப்பின் மூலம் நிலையான பொருளாதார வளர்ச்சியை செயல்படுத்துகிறது. இந்த வெளியீட்டில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் ஆசிரியர்களின் கருத்துக்கள் மற்றும் அவை ஐரோப்பிய ஒன்றியம், UNDP உட்பட ஐக்கிய நாடுகள் சபை அல்லது UN உறுப்பு நாடுகள் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இந்தப் பிரசுரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பதவிகள் மற்றும் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் ஆகியவை எந்தவொரு நாடு, பிரதேசம், நகரம் அல்லது பகுதி அல்லது அதன் அதிகாரிகளின் அல்லது அதன் எல்லைகள் அல்லது எல்லைகளை வரையறுப்பது பற்றி சட்டப்பூர்வ நிலை குறித்து ஐக்கிய நாடுகளின் செயலகத்தின் எந்தவொரு கருத்தையும் வெளிப்படுத்தவில்லை. ஐக்கிய நாடுகளின் ஆவணங்களின் சின்னங்கள் பெரிய எழுத்துக்களால் உருவங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. அத்தகைய சின்னத்தைக் குறிப்பிடுவது ஐக்கிய நாடுகளின் ஆவணத்தைக் குறிக்கிறது. இந்தப் படைப்பு ஐக்கிய நாடுகள் சபைக்காகவும் அதன் சார்பாகவும் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆவணம் எந்த வகையிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரப்பூர்வமான கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.

குறிப்பு

இந்த வெளியீட்டில் இடம் பெற்றிருக்கும் பதவிகள் மற்றும் விளக்கங்கள், ஐக்கிய நாடுகளின் செயலகத்தின் கருத்துக்கள், ஒரு நாட்டின் எல்லை, நகரம் அல்லது பகுதி, அல்லது அதன் அதிகாரிகளின் சட்ட நிலைகள் அல்லது ஒரு நாட்டின் எல்லைகளை வரைமுறைப்படுத்துவது  ஆகியவற்றை பிரதிபலிக்கவில்லை.

ஐக்கிய நாடுகளின் குறியீடுகள், பெரிய எழுத்துக்கள் மற்றும் வடிவங்களினால் குறிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருப்பது ஐக்கிய நாட்டின் ஆவணத்தைக் குறிக்கிறது.

HR/PUB/11/04
© 2011 ஐக்கிய நாடுகள்
அனைத்து உலகளாவிய உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

Funded by the European Union

BUSINESS AND HUMAN RIGHTS | ASIA

U N D P

# பொருளடக்கம்

**I. மனித உரிமைகளை பாதுகாப்பதில் அரசின் கடமை**

A. அடிப்படைக் கொள்கைகள்

B. செயல்பாட்டுக் கொள்கைகள்

**II. மனித உரிமைகளை மதிப்பதில் பெருநிறுவனங்களின் (கார்ப்பரேட்) பொறுப்பு**

A. அடிப்படைக் கொள்கைகள்

B. செயல்பாட்டுக் கொள்கைகள்

**III. தீர்வுக்காண அணுகுதல்**

A. அடிப்படைக் கொள்கைகள்

B. செயல்பாட்டுக் கொள்கைகள்

இந்த வெளியீட்டில், “வணிகம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய வழிகாட்டும் கோட்பாடுகள்: ஐக்கிய நாடுகள் சபையின் ‘பாதுகாத்தல், மதிப்பு, மற்றும் தீர்வு’ கட்டமைப்பை செயல்படுத்தி, ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளரின் சிறப்புப் பிரதிநிதியால் மேம்படுத்தப்பட்ட மனித உரிமைகள், பிரச்சனைகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள் ஆகியவை உள்ளன. சிறப்பு பிரதிநிதி, மனித உரிமைகள் கவுன்சிலின் (A/HRC/17/31) இறுதி அறிக்கையில், வழிகாட்டும் கொள்கைகள் இணைக்கப்பட்டது. இதில் வழிகாட்டு கொள்கைகள் மீது ஒரு அறிமுகமும், அதன் வளர்ச்சிக்கு உதவிய செயல்முறைகளை பற்றிய கண்ணோட்டமும் உள்ளடங்கியுள்ளது.

மனித உரிமைகள் கவுன்சில் 16 ஜூன் 2011 அன்று வழிகாட்டும் கோட்பாடுகளை 17/4 தீர்மானத்தின் கீழ் அங்கீகரித்தது.



# பொதுவான கொள்கைகள்

## இந்த வழிகாட்டு கொள்கைகள், பின்வரும் அங்கீகாரங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டவை:

(a) அரசாங்கங்களின் தற்போதைய கடமைகள் அடிப்படையில், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மதித்தல், பாதுகாத்தல், நிறைவேற்றுதல்;

(b) வணிக நிறுவனங்கள் ஒரு சமுதாயத்தின் சிறப்பு அங்கமாக இருந்து, அதற்குரிய சட்ட திட்டங்களை உட்படுத்தி, தனி மனித உரிமைக்கு மரியாதை அளித்து, தங்களது வணிகத்தை நடத்துவது;

(c) உரிமைகள் மற்றும் கடமைகள் மீறப்படும்போது, அவற்றை சரியான மற்றும் பயனுள்ள வகையில் மாற்றியமைத்தல்.



அனைத்து அரசுகள் மற்றும் அனைத்து விதமான வணிக நிறுவனங்களுக்கும், அவை சார்ந்த துறை, இருப்பிடம், உரிமை மற்றும் வடிவம் ஆகியவற்றின் தன்மை மாறுபட்டிருந்தாலும், இந்த வழிகாட்டு நெறிமுறைகள் பிறவற்றிற்கும் பொருந்தும்.

வணிக மற்றும் தனி மனித உரிமைகளின் தரம் மற்றும் பழக்கங்களை மேம்படுத்த விரும்பும் இந்த வழிகாட்டு நெறிமுறைகளை, முழுமையான ஒன்றாகப் புரிந்துக் கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்ட தனி நபர் மற்றும் சமுதாயத்திற்கு உறுதியான தீர்வை அளிக்க முடியும். மேலும், இதன் மூலம் சமூகம் சார்ந்த நிலையான உலகமயமாக்குதலை அளிக்க முடியும்.

இந்த வழிகாட்டும் கொள்கைகளில், எதையும், புதிய சர்வதேச சட்டக் கடமைகளை உருவாக்குவதாகவோ அல்லது சர்வதேச சட்டத்தின் கீழ் மனித உரிமைகளை நிறைவேற்றும் ஒரு நாட்டின் சட்டபூர்வ கடமைகளை மட்டுப்படுத்துவது அல்லது குறைத்து மதிப்பிடுவதாகவோ கருதக்கூடாது. ஒடுக்கப்படக்கூடிய அல்லது அதிகம் பாதிக்கப்படக்கூடிய ஒரு குழு அல்லது மக்கள் தொகையிலுள்ள தனி நபர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், மற்றும் அவர்களது உரிமைகள் மற்றும் தேவைகளை கவனத்தில் கொண்டு, ஆண், பெண் இருபாலரும் எதிர்கொள்ளக்கூடிய பல்வேறு அச்சுறுத்துதல்களைக் கணக்கில் கொண்டு, இந்த வழிகாட்டு நெறிமுறைகளை பாகுபாடின்றி நடைமுறைப்படுத்த வேண்டும்.

# I. மனித உரிமையைக் காப்பது அரசின் கடமை

## A. அடிப்படைக் கொள்கைகள்

**1. அரசுகள், தங்கள் எல்லைக்குள் மற்றும் / அல்லது அதிகார வரம்புக்குள் செயல்பட்டு, மூன்றாம் தரப்பினர் மற்றும் வணிக நிறுவனங்கள் மூலம் ஏற்படும் மனித உரிமை மீறல்களிலிருந்து பாதுகாக்க வேண்டும். பயனுள்ள கொள்கைகள், சட்டம், விதிமுறைகள் மற்றும் தீர்ப்புகள் மூலம் இதுபோன்ற முறைகேடுகளை தடுக்கவும், விசாரிக்கவும், தண்டிக்கவும் மற்றும் சரிசெய்யவும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.**

### விளக்கவுரை :

அரசுகளின் சர்வதேச மனித உரிமை சட்டத்தின் கடமை என்பது அச்சட்டங்கள் தனி மனித உரிமைகளை, அவர்களது எல்லை மற்றும் அதிகார வரம்பிற்கு உட்பட்டு மதித்து, பாதுகாப்பு அளிப்பதாகும். இதில் தொழில் நிறுவனங்கள் போன்ற மூன்றாம் தரப்பினரால் ஏற்படும் தனி மனித உரிமை மீறலும் அடங்கும்.
நடத்தை கோட்பாடுகளை பாதுகாப்பதே அரசின் உரிமை ஆகும். அதனால் தானாக ஒரு அரசு, ஒரு தனியாரின் உரிமை மீறலுக்கு பொறுப்பாகாது.
அதே சமயம், அவ்வாறான மீறல்கள் மீது சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டு அவற்றை தடுக்க, விசாரிக்க, தண்டனை அளிக்க பாதிக்கப்பட்ட தனி நபருக்கு தகுந்த நிவாரணம் அளிக்கப்படவில்லை என்று நினைத்தால், அப்பொழுது அரசுகள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை சட்டங்களை மீறுவதற்கு உள்ளாகும்.
பொதுவாக, இவ்வகை விதி மீறல்களை தீர்மானிக்கும் அதிகாரம் அரசுகளுக்கு இருக்கிறது என்றாலும், அவர்கள் முழு அளவில் அனுமதிக்கப்பட்ட தடுப்பு மற்றும் பரிகார நடவடிக்கைகளுடன், கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் தீர்ப்புகளைக் கணக்கில் கொள்வது அவசியம். மேலும், சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் அரசுக்கு கடமை உள்ளது. அதில் சட்டத்தின் முன் அனைவரும் சமம், அதனை நடைமுறைப் படுத்துவதில் நேர்மை போன்றவற்றை உறுதிச் செய்யத் தேவையான பொறுப்புடைமை, சட்டத்தின் உறுதிப்பாடு, வெளிப்படைத் தன்மையுள்ள சட்ட செயற்பாடுகளும் அடங்கும்.

இந்த அத்தியாயம், தடுப்பு முறைகளை பற்றி விவரிக்கிறது. அத்தியாயம் மூன்று, தீர்வு நடவடிக்கைகளை விளக்குகிறது.



**2. தங்கள் எல்லைக்குட்பட்ட இடத்தில் அமைந்திருக்கும் அனைத்து வணிக நிறுவனங்களும், தங்கள் வணிகத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் மனித உரிமைகளை மதிக்கின்றது என்பதை அரசுகள் உறுதி செய்ய வேண்டும்.**

### விளக்கவுரை :

தற்பொழுது, சர்வதேச மனித உரிமை சட்டத்தின்படி, தங்கள் எல்லைக்குட்பட்ட இடங்களில் உள்ள வணிக நிறுவனங்களின் நடவடிக்கைகள், தங்கள் எல்லைக்கு அப்பால் நடக்கும்போது அதனை கட்டுப்படுத்தும் அவசியம் மாநிலங்களுக்கு இல்லை. அதே போல், வரையறுக்கப்பட்ட எல்லைகள் இருந்தால் அவ்வாறு கட்டுப்படுத்துவதற்கும் தடை இல்லை. இந்த சட்ட வரையறைகளை கணக்கில் கொண்டு, சில மனித உரிமை ஆணையங்கள், வணிக நிறுவனங்கள் ஒரு அரசின் எல்லைக்குட்பட்டு இருக்கும்போது, எல்லைக்கு அப்பால் உள்ள அந்நிறுவனங்களிலும், மனித உரிமை மீறல் ஏற்படாவண்ணம் அந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறுகின்றன.

வணிக நிறுவனங்கள், தங்கள் நாட்டின் மனித உரிமைகள் மதிக்கப்படுவதை உறுதி செய்துகொள்ள, அவ்வரசு, தேவையான அனைத்து நெறிகாட்டுதல்களை கொள்கையின் அடிப்படையில் ஏற்படுத்தியிருக்க வேண்டும். இவற்றால், அந்நிறுவனங்களின் வணிக போக்கை முன்னதாக கணிப்பதற்கு தேவையான ஆலோசனைகளை அவ்வப்போது அளிப்பதுடன், நாட்டின் பெயரையும் காத்துக்கொள்ள முடியும்.

இதற்காக அரசுகள் பல வகையான முறைகளை கையாளுகின்றன. அவற்றில் ஒரு சில உள்நாட்டு நடவடிக்கைகள், நாட்டின் எல்லைக்கு அப்பாற்பட்ட தாக்கங்களை ஏற்படுத்தும். உதாரணத்திற்கு, தாய் நிறுவனம் (parent company ) தனது அனைத்து வெளிநாட்டு செயல்பாடுகளைப் பற்றியும் அரசுக்கு தெரிவிப்பது மற்றும் பலதரப்பட்ட மென்மையான சட்ட திட்டங்கள் (multilateral soft-law instruments), அந்த பன்னாட்டு நிறுவனம் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கு ஏற்படுத்தியிருக்கும் வழிமுறைகள் மற்றும் பன்னாட்டு முதலீடுகளில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களின் தர நிலைகளை தெரிவிப்பது போன்றவை இதனுள் அடங்கும். இதைத் தவிர, நேரடியான எல்லை தாண்டிய சட்டங்கள் மற்றும் அவற்றை அமலாக்குவதும் அடங்கும். இதில், குற்றவியல் ஆட்சி மற்றும் அதை சார்ந்த வழக்குகள் ஏற்படும் போது, அந்த தவறு எந்த நாட்டில் நடந்தாலும், குற்றவாளியின் குடியுரிமைக்கு ஏற்ப வழக்கு நடைபெற அனுமதிப்பது ஆகும். பலதரப்பட்ட காரணங்கள், அரசின் உணரப்பட்ட மற்றும் உண்மைநிலை தன்மையுள்ள செயல்பாடுகளுக்கு ஊக்குவித்திருக்கலாம். உதாரணத்திற்கு, அந்நிறுவனம், பன்னாட்டு ஒப்பந்தத்தில் உள்ளடங்கியுள்ளதா என்று கண்டறிதல்.

# B. செயல்பாட்டுக் கொள்கைகள்:

## அரசுகளுக்கான பொதுவான ஒழுங்குமுறை மற்றும் கொள்கை செயல்பாடுகள்:

**3. ஒரு அரசானது தன்னை பாதுகாத்துக்கொள்ள செய்ய வேண்டிய கடமைகள்**

(a) ஒரு தொழில் நிறுவனமானது, மனித உரிமையை மதித்து, மேலும் அவ்வபோது அதனைக் கண்காணித்து, அதில் உள்ள குறைகளைக் களைந்து தேவையான சட்டங்களை அமல்படுத்துவது;

(b) அந்நிறுவனத்தை நிறுவுவதற்காகவும் மற்றும் அதன் செயல்பாடுகளுக்காகவும் ஏற்படுத்தப்பட்ட பெருநிறுவன சட்டம் (கார்ப்பரேட் சட்டம்) போன்ற மற்ற சட்ட திட்டங்களினால், மனித உரிமைகள் மீறப்படாமல் இருப்பதை உறுதி செய்வது;

(c) அந்நிறுவனத்தின் செயல்பாடுகளில், மனித உரிமைகளை எவ்வாறு மதிக்க வேண்டும் என்பது குறித்த பயனுள்ள வழிகாட்டுதல்களை வழங்குவது;

(d) தேவையான சமயங்களில் அந்நிறுவனங்கள் மனித உரிமைகளின் தாக்கங்களை எவ்வாறு கையாளுகிறது என்பதை அறிந்து, தெரிவித்து அவற்றை ஊக்குவிப்பது;

## விளக்கவுரை :

வணிகங்கள் அரசின் செயலற்ற தன்மையை எப்போதும் விரும்புவதாகவோ அல்லது அதனால் பயனடைவதாகவோ அரசுகள் கருதக்கூடாது. மேலும் மனித உரிமைகளுக்கான வணிக மரியாதையை வளர்ப்பதற்கு தேசிய மற்றும் சர்வதேச, கட்டாய மற்றும் தன்னார்வ நடவடிக்கைகளின் தெளிவான வழிமுறைகளை அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

நடைமுறையில், ஒரு அரசு, உரிமைகளுக்கான வணிக மரியாதையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கட்டுப்படுத்தும் சட்டங்களை அமல்படுத்தத் தவறுவது ஒரு குறிப்பிடத்தக்க சட்ட இடைவெளியாகும் . இத்தகைய சட்டங்களில், பாகுபாடற்ற சட்டங்கள் முதல் தொழிலாளர்கள் சட்டங்கள், சுற்றுச்சூழல், சொத்து, தனியுரிமை மற்றும் லஞ்ச ஒழிப்பு சட்டங்கள் வரை அடங்கும். அதனால், இத்தகைய சட்டங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பது ஒரு அரசின் கடமையாகும். அவ்வாறு செயல்படாவிட்டால், ஏன் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும், அதனை சரி செய்வதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் அரசுகள் சிந்திக்க வேண்டும்.

மேலும், இந்த சட்டங்கள் தற்போதைய சூழ்நிலையில் தேவையான பாதுகாப்பினை அளிக்கிறதா, தொடர்புடைய கொள்கைகளுடன் இணைந்து வணிகத்தில் மனித உரிமைகளுக்கு மதிப்பு அளிப்பதற்குத் தேவையான சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குகிறதா என்பதை அரசுகள் தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டும். உதாரணத்திற்கு, தேவையான நிலத்தை வாங்கவோ அல்லது பயன்படுத்தவோ உரிய சட்ட உரிமைகளை பெற்று கையகப்படுத்துவது என்பது நில உரிமையாளர்கள் மற்றும் தொழில் நிறுவனம் இருவரையும் பாதுகாப்பதற்கு மிகவும் அத்தியாவசியமானது என்பதால் அதில் தெளிவான வழிமுறைகள் இருக்கிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

வனிக நிறுவனங்களின் உருவாக்கம் மற்றும் அவற்றின் செயல்பாட்டை முறைப்படுத்தும், பெருநிறுவன சட்டம் மற்றும் பத்திரச் சட்டம் போன்ற சட்டங்களும், கொள்கைகளும், வணிக நடத்தையை நேரடியாக வடிவமைக்கின்றன. இருப்பினும், மனித உரிமைகளில் இவை ஏற்படுத்தும் பாதிப்புகளை பற்றிய சரியான புரிதல்கள் இல்லை.



உதாரணத்திற்கு, பெருநிறுவனங்கள் (கார்ப்பரேட் ) மற்றும் அதிகாரிகளுக்கு மனித உரிமை சட்டப்படி செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை எவை என்பது குறித்த தெளிவின்மை உள்ளது. இதற்கான சட்டம் மற்றும் கொள்கைகள், வணிக நிறுவனங்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை அளிப்பதன் மூலம் அந்நிறுவனங்கள், நடைமுறையில் உள்ள கார்போரேட் போர்ட் (corporate board) போன்ற ஆட்சிமுறைக்கு உரிய மதிப்பளித்து மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு ஆவண செய்யவேண்டும்.

மனித உரிமையை பாதுகாப்பதற்கு வணிக நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் வழிகாட்டு நெறிமுறைகளில் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி குறிப்பிடுவதோடு, அதனை அந்நிறுவனங்கள் சீரிய முறையில் பயன்படுத்துவதற்கு வழி வகுக்க வேண்டும். மேலும் அதில் மனித உரிமையில் அக்கறை, பாலின அடிப்படையில் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை எப்படி சமாளிப்பது, அவர்களுக்கு உண்டாகும் பாதிப்பு மற்றும் சமமின்மை, உள்நாட்டு மக்கள், பெண்கள், தேசிய அல்லது இன சிறுபான்மையர்கள், மத மற்றும் மொழி வாரியான சிறுபான்மையர்கள், உடல் ஊனமுற்றவர்கள், மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்கள் ஆகியோர் சந்திக்கும் குறிப்பிட்ட சவால்களை எதிர்கொள்வதர்க்கு தேவையான சரியான முறைகளையும் குறிப்பிட வேண்டும்.

பாரிஸ் கொள்கைகளை பின்பற்றும் தேசிய மனித உரிமை நிறுவனங்கள், அரசுகள் இயற்றிய சட்ட திட்டங்கள், மனித உரிமை கடமைகளுடன் சரியாக இணைந்து இருக்கின்றனவா என்பதை உறுதி செய்வதோடு அவற்றை முறையாக அமுல்படுத்த அரசுகளுக்கு தேவையான உதவிகளை செய்யும் முக்கிய பொறுப்பினை கொண்டுள்ளது. மேலும், வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு சாராத நிறுவனங்களுக்கு அவர்கள் பின்பற்ற வேண்டிய மனித உரிமை பற்றிய வழிகாட்டுதல்களை ஏற்படுத்தி தரும் கடமையும் அவற்றிற்கு உள்ளது.

வணிக நிறுவனங்கள், தங்களுக்கு ஏற்படும் மனித உரிமைகள் பாதிப்புகளை எவ்வாறு எதிர்கொள்கின்றன என்று தங்கள் பங்குதாரர்களுக்கு அதிகாரபூர்வமற்ற முறையிலோ அல்லது அதிகாரபூர்வமான பொது அறிவிப்பின் மூலமாகவோ தானே முன் வந்து தெரியப்படுத்தக்கூடும். இவ்வகை அறிவிப்புகளை அரசுகள் ஊக்குவிப்பது அல்லது தேவையான இடங்களில் துணை நிற்பது, ஒரு தொழில் நிறுவனம் மனித உரிமையை மதித்து நடப்பதற்கு மிகவும் முக்கியமாகும். இவ்வாறு செயல்படும் நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கும் விதமாக, அந்நிறுவனங்கள் மீது ஏதேனும் சட்ட ரீதியான அல்லது நிர்வாக நடவடிக்கை எடுக்க நேரிடும்போது, அவர்கள் இவ்வாறு தாமாக முன்வந்து தெரியப்படுத்திய நிகழ்வுகளை கணக்கில் கொள்ளலாம். ஒரு நிறுவனத்தின் செயல்பாடுகள் அல்லது அவை செயல்படும் சூழல் மனித உரிமைக்கு குறிப்பிடும்படியான ஆபத்தை ஏற்படுத்தும்போது, அந்நிறுவனங்கள் தாமாக முன் வந்து அவற்றை தங்கள் பங்குதாரர்களுக்குத் தெரிவிப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். ஒரு தொழில் நிறுவனம் எவ்வாறு இதனை தெரியப்படுத்தவேண்டும் என்பதை இந்த பகுதிகளில் உள்ள கொள்கைகள் மற்றும் சட்டங்கள் உபயோகமான முறையில் தெளிவுபடுத்துவதன் மூலம், அந்த அறிக்கைகள் சுலபமாக கிடைப்பதற்கும் சரியான முறையில் இருப்பதற்கும் பயனுள்ளதாக இருக்கும். முறையான அறிவிப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் போது, அதனால் ஒரு தனி மனிதன் அல்லது நிறுவனத்தின் பாதுகாப்பிற்கு ஏற்படக்கூடிய அபாயங்கள், வர்த்தக ரீதியாக தேவைப்படும் ரகசியம், மற்றும் நிறுவனத்தின் அமைப்பு மற்றும் அளவில் உள்ள மாற்றங்கள் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

வணிக நிறுவனத்தின் பொருளாதார செயல்திறனுக்கு, சில சமயங்களில், மனித உரிமையின் தாக்கம் என்பது “அடிப்படையாக” அல்லது “முதன்மையானதாக” இருப்பதாக நிதிநிலை அறிக்கை தெளிவுபடுத்த வேண்டும்.

# அரசு - நிறுவன உறவு

**4. அரசால் நிறுவப்பட்ட அல்லது அதன் கட்டுப்பாட்டில் இருக்கும் அல்லது அரசுகளிடம் இருந்து அதிக உதவியையும், சேவைகளையும் பெறும் ஏற்றுமதி கடன் முகவர்கள், அரசாங்க காப்பீட்டு நிறுவனங்கள் அல்லது உத்திரவாத நிறுவனங்களில் மனித உரிமை மீறல்கள் ஏற்படாமல் காப்பாற்றுவதற்கு அரசுகள் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.**

## விளக்கவுரை :

சர்வதேச மனித உரிமை சட்டத்தின்படி, அரசுகள், மனித உரிமை சட்டத்தின் முதன்மை பொறுப்பாளர்கள் மற்றும் அவர்கள் அனைவரும் கூட்டாக சர்வதேச மனித உரிமை ஆட்சியின் அரங்காவளர்கள் ஆவர். ஒரு நிறுவனம், அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது அல்லது அதன் செயல்பாடுகள் வேறு விதமாக அரசின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்போது, அந்நிறுவனத்தின் மனித உரிமை மீறல் என்பது அவ்வரசு சர்வதேச மனித உரிமை சட்டத்தை மீறுவதற்கு சமமாகும். மேலும் ஒரு நிறுவனம், அரசுக்கு நெருக்கமாக இருந்தாலோ அல்லது அரசின் சட்ட துறை அல்லது வருமான வரித்துறையினை அதிகம் சார்ந்திருந்தாலோ, அந்நிறுவனத்தில் மனித உரிமை மதிக்கப்படுவதை நன்கு உறுதி செய்வது அவ்வரசின் பொறுப்பாகிறது.

அரசுக்கு சொந்தமான அல்லது அரசால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களில், அரசு தன் அதிகாரத்திற்குட்பட்டு, அந்நிறுவனத்தில் மனித உரிமையை மதிக்கும் சம்பந்தப்பட்ட கொள்கைகள், சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவை சரியாக நடைமுறை படுத்தப்படுகின்றதா என்று கூடுதல் அளவில் கண்காணிக்க முடியும். மூத்த மேலாண்மை அதிகாரிகள் நேரடியாக அரசு துறைகளுக்கு தங்கள் அறிக்கைகளை அனுப்புவதால், அரசு துறைகள் அவற்றை பரிசீலிக்கும் வாய்ப்பு மிகவும் அதிகம். இதனால் பயனுள்ள வகையில் மனித உரிமையை ஆய்வு செய்து அதனை செயல்படுத்த முடிகிறது. (இந்நிறுவனங்கள் பகுதி II -ல் கூறியபடி மனித உரிமையை மதிக்கும் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்கின்றன).

அதிகாரப்பூர்வமாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு அரசுடன் இணைந்திருக்கும் சில அமைப்புக்கள், அவ்வரசின் வணிக நடவடிக்கைகளுக்கு ஆதரவு மற்றும் தனது சேவைகளை அளிக்கின்றன. ஏற்றுமதி கடன் முகவர்கள், அரசாங்க காப்பீட்டு நிறுவனங்கள் அல்லது உத்திரவாத நிறுவனங்கள், வளர்ச்சி நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகியவை இவற்றில் அடங்கும். தன்னை சார்ந்திருக்கும் வர்த்தக நிறுவனங்களின் மனித உரிமைகள் மீறல்கள் ஏற்படுத்தக்கூடிய உண்மையான மற்றும் சாத்தியக்கூறுள்ள எதிர்மறை விளைவுகளைப் பற்றி இந்நிறுவனங்கள் ஆய்வு செய்யாவிட்டால், அந்த வர்த்தக நிறுவனங்களின் தவறான நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக ஆதரவு அளிப்பதால் தங்களின், நம்பகத்தன்மை, நிதி, அரசியல் மற்றும் சட்டம் ஆகியவற்றில் ஆபத்திற்கு உட்படுத்திக்கொள்கிறார்கள். இதன் காரணமாக, வர்த்தக நிறுவனத்தின் சேவைகளைப் பெறும் அரசு மனித உரிமை மீறல் வழக்குகளை சந்திக்க நேரிடும்.

இவ்வகை ஆபத்துகள் இருப்பதால், இந்நிறுவனங்கள் தாமாகவே முன் வந்து தனது வாடிக்கையாளர்களின் நிறுவனங்களில் மனித உரிமை மீறல்கள் நடைபெறாமல் இருப்பதை ஆய்வு செய்து உறுதி செய்துக்கொள்வதை அரசுகள் ஊக்குவிக்க வேண்டும். இந்நிறுவனங்களில் மனித உரிமையினை கூர்மையாக ஆய்வு செய்வது மட்டுமே சரியான முறையாக இருக்க முடியும். ஏனென்றால், இங்கே வணிக செயல்பாடு மற்றும் அதன் முறைகள் மூலம் மனித உரிமை மீறல்கள் ஏற்படும் அபாயம் அதிகமாகும்.



**5) மனித உரிமைகள் மீது பாதிப்பு ஏற்படக்கூடிய ஒரு வணிக நிறுவனத்துடன் அரசுகள் ஒப்பந்தம் போடும்போது, தன்னுடைய சர்வதேச மனித உரிமை கடமைகளை மீறாமல் இருப்பதை அரசுகள் கண்டிப்பாக உறுதி செய்து கொள்ள வேண்டும்.**

## விளக்கவுரை :

சர்வதேச மனித உரிமைகளில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய சில துறைகளை தனியார் மயமாக்கும்போது கூட, ஒரு அரசு மனித உரிமைகளை பாதுகாக்கும் தனது பொறுப்பிலிருந்து விலக இயலாது. அவ்வகை நிறுவனங்கள், அரசின் மனித உரிமைகள் சட்டத்தினை மீறி செயல்படுவதை அவ்வரசு தடுக்க தவறினால் அதன் காரணமாக அவ்வரசானது சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும். மேலும், இதனால் அவ்வரசின் பெயருக்கு களங்கம் ஏற்படும். ஆகையால் இவ்வாறான ஒப்பந்தங்களில் சம்பந்தப்பட்ட நிறுவனம், அரசின் மனித உரிமைகள் சட்டங்களை மதித்து நடக்கும் என்ற உறுதிமொழியை சேர்க்க வேண்டும். இந்த நிறுவனங்களின் நடத்தைகளை தேவையான அளவு தனிப்பட்ட முறையில் நன்கு கண்காணித்து அவற்றை சட்ட ரீதியாக பொறுப்பேர்ப்புக்கான முன்னேற்பாட்டினை அரசுகள் செய்துக் கொள்ள வேண்டும்.

**6) அரசுகளுடன் இணைந்து செயல்படும் நிறுவனங்களில், மனித உரிமைகளுக்கு உரிய மரியாதையை அந்நிறுவனங்கள் அளிப்பதை, அரசு ஊக்குவிக்க வேண்டும்.**

## விளக்கவுரை :

வணிக நிறுவனங்களுடன் அரசுகள் கொள்முதல் மட்டுமன்றி பல்வேறு வகையான வணிக பரிவர்த்தனைகள் மேற்கொள்கின்றன. இதனால், தனிப்பட்ட முறையிலும், கூட்டு முறையிலும் அந்நிறுவனங்கள் மனித உரிமைகளை பற்றி தெரிந்துக் கொள்வதற்கும், அதனை மதிப்பதற்கும் வழி வகுக்க அரசுகளுக்கு தனித்துவமான வாய்ப்பு கிடைக்கின்றது. தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களின்படி, மனித உரிமைகளில் அரசின் கடமைகளை தெரிவிக்கும் வாய்ப்பு அந்த நிறுவனத்துடன் ஏற்படும் ஒப்பந்தத்திலேயே ஏற்படுகிறது.

# சர்ச்சையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனித உரிமைகளுக்கான வணிக மரியாதையை ஆதரித்தல்

**7) சர்ச்சையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், அதிகமான மனித உரிமை மீறல்கள் ஏற்படக்கூடிய அபாயம் அதிகம் உள்ளதால், அவ்விடங்களில் செயல்புரியும் வணிக நிறுவனங்கள், அவ்வகை மனித உரிமை மீறல்களில் ஈடுபடாமல் இருப்பதற்கு, அரசுகள் பின்வரும் முறைகளில் அந்நிறுவனங்களுக்கு உறுதியாக உதவி புரிய வேண்டும்:**

(a) முடிந்த வரையில், எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக, வணிக நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகள் மற்றும் வணிக உறவுகளில், மனித உரிமைகள் தொடர்பான ஆபத்துகளை அறிந்துக்கொண்டு, அவற்றை தடுப்பதற்கான வழிகளை மேற்கொள்ள;

(b) நிறுவனங்கள் பாலின பாகுபாடு மற்றும் பாலியல் வன்முறை ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்தி, மனித உரிமை மீறல்களால் ஏற்படும் அதிகபட்ச ஆபத்துகளை கண்டறிந்து, மதிப்பிட்டு அவற்றை தடுப்பதற்கு தேவையான வழிமுறைகளை வகுக்க, அரசுகள் உதவி செய்வது;

(c) அதிகமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு அதனை தடுப்பதற்கு ஒத்துழைக்க மறுக்கும் நிறுவனங்களுக்கு, அவர்கள் பொதுமக்களை சென்றடைவதற்கு வேண்டிய உதவிகளை செய்யாமல் அரசுகள் மறுப்பது;

(d) அவர்களின் தற்போதைய கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் அவற்றை அமலாக்கும் முறைகள், வணிகத்தில் ஏற்படும் முழுமையான மனித உரிமை மீறல்களை சரியான முறையில் கண்டறிந்து சரி செய்வதை உறுதி செய்வது;

## விளக்கவுரை :

சில மோசமான மனித உரிமை மீறல்கள், வணிகம் உட்பட எல்லை கட்டுப்பாடு, வளங்கள் அல்லது அரசே பிரச்சனைகளாக உருவெடுக்கும் சூழலில், மனித உரிமைக்கான ஆட்சியை செயல்படுத்த எதிர்பார்க்க முடியாது. பொறுப்பான தொழில் நிறுவனங்கள், இவ்வகை கடினமான சூழ்நிலைகளில் எவ்வாறு மனித உரிமை மீறல்களை தடுப்பது என்று தொடர்ந்து அரசுகளின் அறிவுரைகளை பெற்று செயல்படுகின்றன. இதில் வித்தியாசமான மற்றும் செயல்படுத்தக்கூடிய முறைகள் தேவை. குறிப்பாக, சர்ச்சைக்குரிய சமயங்களில், இன மற்றும் பாலியல் வன்முறைகள் அதிகம் ஏற்படும் என்பதால், அத்தகைய சமயங்களில், கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அரசுகள், கடினமான சூழ்நிலைகள் களத்தில் வருவதற்கு முன்பே, அதை தீர்ப்பது முக்கியமாக கருதப்படுகிறது. சர்ச்சைக்குரிய இடங்களில், போதிய கட்டுப்பாடுகள் இல்லாததால், அவ்வரசால் தகுந்த மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். சர்வதேச நிறுவனங்களாக இருந்தால், அந்நிறுவனங்களின் தாய்நாட்டிற்கு, அந்த நிறுவனம் மற்றும் அது செயல்படும் நாடு இரண்டிற்கும் உதவி செய்து, வணிகத்தில் மனித உரிமை மீறல்கள் ஏற்படா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை உள்ளது. அதே நேரத்தில் அண்டை நாடுகளுக்கு முக்கியமான கூடுதல் ஆதரவை வழங்க முடியும்.

இவ்வகை சூழ்நிலைகளில், அதிகமான கொள்கை இணக்கம் பெற்ற வணிக நிறுவனங்களுக்கு, போதிய உதவி செய்வதற்கு, தங்களுடைய தொழில் வளர்ச்சி கழகங்கள், வெளிநாட்டு மற்றும் தொழில்துறை அமைச்சகங்கள், தலைநகர் மற்றும் தூதரகங்கள் இருக்கும் இடங்களில் உள்ள ஏற்றுமதி நிதி நிறுவனங்கள், இந்நிறுவனங்கள் மற்றும் தாய் நாட்டில் உள்ள அலுவலகங்கள், ஆகியவற்றுடன் இணக்கமான ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும். மேலும், அரசு நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்த முன்னெச்சரிக்கை குறியீடுகளை உருவாக்கி, அவற்றை வணிக நிறுவனங்கள் பின்பற்றாவிடில், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு, வழங்கப்படும் அரசு ஆதரவை மறுப்பது அல்லது வழங்கப்பட்ட சலுகைகளை திரும்பப் பெறுவது. அவ்வாறு முடியாவிட்டால், எதிர்காலத்தில் அவற்றை வழங்காமல், அவர்களையே பொறுப்பாக்குவது அவசியம்.

பாதிக்கப்பட்ட இடங்களில் ஏற்படக்கூடிய ஒட்டுமொத்த மனித உரிமை மீறல்களில், வணிக நிறுவனங்கள் ஈடுபடக்கூடிய வாய்ப்புகள் அதிக அளவு இருப்பதை, அரசுகள் நிறுவனங்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்க வேண்டும். மேலும், அரசுகள், அந்நிறுவனங்கள் தங்கள் கொள்கைகள், சட்டம், விதிமுறைகள் மற்றும் அமலாக்க நடவடிக்கைகள், இந்த உச்சகட்ட ஆபத்தை திறம்பட எதிர்கொள்கிறதா என்பதை அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். அவற்றில் குறைபாடுகள் ஏதேனும் இருப்பது தெரிந்தால், அரசுகள் அவற்றை சரி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அனைத்து நடவடிக்கைகளும், சர்ச்சைக்குரிய சமயங்களில், சர்வதேச மனிதநேய சட்டம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கீழ் அரசுகளுக்கு கூடுதல் கடமை வகுக்கப்படுகிறது. மேலும், இவ்வகை நடவடிக்கைகளில், நிறுவனங்கள் ஈடுபடாமல் இருப்பதற்கு, அரசுகள் பலதரப்பட்ட மற்றும் பயனுள்ள அணுகுமுறைகளை கூட்டு முயற்சியின் மூலம் செய்ய கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்த அனைத்து நடவடிக்கைகளும், போர் சமயத்தில், சர்வதேச மனிதநேய சட்டம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டம், ஆகியவற்றுடன் சேர்ந்து செய்யவேண்டும்.



# கொள்கை இணக்கம் உறுதி செய்தல் :

**8) வணிக வழிமுறைகளை மேற்கொள்ளும் அரசு துறைகள், முகவர்கள் மற்றும் அரசு சார்ந்த துறைகள், தங்கள் கடமைகளை செயல்படுத்தும் போது அரசுக்குரிய மனித உரிமை கடமைகளை கவனத்தில் கொண்டு, பொறுப்பேற்று அதற்குரிய தேவையான தகவல்கள், பயிற்சிகள் மற்றும் உதவிகளை நிறைவேற்ற மாநில அரசு உறுதி செய்ய வேண்டும்.**

## விளக்கவுரை :

அரசின் மனித உரிமை கடமைகள் மற்றும் அவை தொழில் தொடங்குவதற்க்கான சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் ஆகியவற்றிற்கிடையே எந்த ஒரு தவிர்க்க முடியாத அழுத்தமும் இல்லை. இருப்பினும், சில சமயங்களில், பல்வேறு சமூகத் தேவைகளை சரிசெய்ய அரசுகள் கடினமான சமநிலைப்படுத்தும் முடிவுகளை எடுக்க வேண்டும். இதில் சரியான சமன்பாட்டை பெறுவதற்கு அரசுகள் தொழில் மற்றும் மனித உரிமை கொள்கைகளில் ஒரு பரந்த நோக்கத்துடன் கூடிய முடிவை எடுக்க வேண்டி வரும். இதன் மூலம், பலதரப்பட்ட கோட்பாடுகள் (vertical and horizontal domestic policy), உள்நாட்டு கொள்கையை ஒருங்கிணைக்க உறுதி செய்தல்.

செங்குத்து கொள்கையானது (vertical policy), அரசின் சர்வதேச மனித உரிமை சட்டங்களை முறையாக செயல்படுத்த, அதற்குரிய கொள்கைகள், சட்டங்கள் மற்றும் நடைமுறைகளை கொண்டிருத்தல் வேண்டும். கிடைமட்ட கொள்கையானது (horizontal policy), தேசிய மற்றும் துணை தேசிய (sub national) அளவில் வணிக கொள்கைகளை உருவாக்கும் துறைகள் மற்றும் முகவர்களுக்கு ஆதரவு, தேவையான வழிகாட்டுதல்கள் அளிப்பதாகும். இதில் கார்ப்பரேட் சட்டம், பத்திர ஒழுங்குமுறைகள், முதலீடு, ஏற்றுமதி கடன் மற்றும் காப்பீடு, தொழில் மற்றும் உழைப்பாளர் சட்டம் ஆகியவை அரசாங்கத்தின் மனித உரிமை சட்டங்களை ஒற்றிருக்க வேண்டும்.

**9) அரசுகள், மற்ற அரசுடனோ அல்லது வணிக நிறுவனத்துடனோ, வணிகரீதியான கொள்கைகளை உருவாக்கும் பொழுது அவ்வரசு தனது மனித உரிமைக் கடமைகளை அறிந்து, அதர்க்கேற்ப்ப தேவையான உள்நாட்டு கொள்கைகளை வழிவகுக்க வேண்டும். உதாரணதிற்கு, முதலீடுகள் மற்றும் ஒப்பந்தங்கள்.**

## விளக்கவுரை :

அரசானது மற்றொரு அரசு அல்லது தொழில் நிறுவனத்துடன், இரு நாடுகளுக்கிடையேயான முதலீட்டு ஒப்பந்தங்கள், தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் அல்லது முதலீட்டு ஒப்பந்தங்களுக்கான உடன்படிக்கை போன்ற பொருளாதார ஒப்பந்தங்களை கையெழுத்திடும்போது, அந்நாட்டில் பல பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கும். அதே சமயம், அவ்வகை ஒப்பந்தங்கள் அரசின் உள்நாட்டு கொள்கைகளை பாதிக்கக்கூடும். உதாரணத்திற்கு, சில சமயங்களில் சர்வதேச முதலீட்டு ஒப்பந்தங்களில் உள்ள சில நிபந்தனைகள், அந்த அரசு முழுமையாக மனித உரிமை கொள்கைகளை செயல்படுத்துவதில் சில பாதிப்புக்களை உண்டாக்கக்கூடும். மேலும் அவ்வரசு, சர்வதேச சட்டநடுவர் மன்றத்தை எதிர்கொள்ளக்கூடிய சூழ்நிலையை உருவாக்கும். ஆகையால், அரசுகள் கவனத்துடன் மனித உரிமை சட்டங்களை பாதுகாப்பதில் தேவையான கொள்கை மற்றும் ஒழுங்குமுறையை திறம்பட செயல்படுத்த, அவ்வகை ஒப்பந்தங்களில், முதலீட்டாரின் பாதுகாப்பையும் உறுதி செய்தல்.

**10) பலததரப்பட்ட நிறுவனத்தில், தொழில் ரீதியான விஷயங்களை தீர்மானிக்கும் உறுப்பினர்களாக அரசு செயல்படும்போது:**



(a) உறுப்பினர் அரசுகள், தங்களது வணிக நிறுவனங்களில், மனித உரிமைகளை மதிப்பதிலும், பாதுகாப்பதிலும் அல்லது அதற்கு தடை ஏற்படாமல் இருக்குமாறு கண்காணிப்பதிலும் எந்த கட்டுப்பாடுகளையும் விதிக்காதவாறு பார்த்துக்கொள்வது;

(b) அந்நிறுவனங்கள், அவற்றின் வணிக மதிப்பீடு மற்றும் திறனுக்கேற்ற மனித உரிமையை மதித்தல்; உதவி கோரினால், வணிக நிறுவனங்கள் மனித உரிமையை மீறும்போது அதனைக் கட்டுப்படுத்த அரசுகளுக்கு தேவையான தொழில்நுட்ப உதவி, திறன் மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

(c) இந்த வழிகாட்டும் கொள்கைகள் அடிப்படையில், மனித உரிமை சவால்களை எதிர்கொள்வதற்காக புரிதலை பகிர்ந்து, வணிக மேலான்மையை ஏற்படுத்தி, கூடுதலான சர்வதேச ஒத்துழைப்புடன் ஊக்குவித்து மேம்படுத்துதல்;

## விளக்கவுரை :

சர்வதேச அளவிலும் அதிகப்படியான கொள்கை இணக்கத்தை பின்பற்ற வேண்டும். குறிப்பாக, வணிகம் ரீதியான பிரச்சனைகளை சந்திக்கும் சர்வதேச வர்த்தகம் மற்றும் நிதி நிறுவனங்களில், அரசுகள் பங்களிக்கும் போது, அதிக அளவில் கொள்கை இணக்கம் தேவை. இவ்வாறு பங்கு பெறும்போது, அரசுகள் தங்களது சர்வதேச மனித உரிமை சட்ட பொறுப்புக்களை தக்க வைத்துக்கொள்ளுதல் அவசியம்.

இந்நிறுவனங்கள், திறன் மேம்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் அனைத்து அரசுகளும் பாதுகாப்பதற்கான கடமையை நிறைவேற்ற உதவுவதில் முக்கிய பொறுப்பு வகிக்கின்றன. இதனால் இந்நிறுவனங்கள், அனைத்து அரசுகளுக்கும் சவால்களை எதிர்கொள்ளும் கருத்து பரிமாற்றங்கள் மற்றும் தகுந்த வழிமுறைகளை கொடுப்பதன் மூலம், நிலையான அணுகுமுறைகளை மேற்கொள்ள உதவுகிறது.

பன்னாட்டு நிறுவனங்களின் கூட்டு முயற்சியின் மூலம் தொழில் நிறுவனங்கள், மனித உரிமைகளை மதிப்பதற்க்கான ஒரு சீரான சூழ்நிலையை உருவாக்கி பின்தங்கியவர்களின் செயல்திறனை அதிகரிக்க முடியும். இவற்றில், அரசுகளும், பன்னாட்டு நிறுவனங்களும் மற்றும் இதர முதலீட்டாளர்களும் ஒற்றுமையை மேம்படுத்த முக்கிய பங்குவகிக்கின்றன.

இவ்வழிகாட்டுக் கோட்பாடுகள், இது சம்பந்தமாக ஒரு பொதுவான மேற்கோள்குறிப்பினை வழங்கி ஒட்டுமொத்த உறுதியான விளைவை உருவாக்கும் அடிப்படையாக செயல்பட்டு, சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் பொறுப்புகளை கணக்கில் எடுத்துக்கொள்கிறது.

# II) மனித உரிமைகளை மதிப்பதில் பெருநிறுவனங்களின் பொறுப்பு

## A. அடிப்படை கொள்கைகள்:

**11. வணிக நிறுவனங்கள் மனித உரிமைகளை மதிக்க வேண்டும். அதாவது, அவர்கள் மற்றவர்களின் மனித உரிமை மீறல்களை தவிர்த்து, அவர்களது தொழிலில் ஏற்படக்கூடிய பாதகமான மனித உரிமை தாக்கங்களை தடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.**

### விளக்கவுரை :

ஒரு தொழில் நிறுவனம், அவர்களது வணிகத்தை எங்கு நடத்தினாலும், மனித உரிமையை மதிப்பது என்பது சர்வதேச அளவில் அவர்களிடம் எதிர்பார்க்கப்படும் நடத்தை ஆகும். மனித உரிமை கடமைகளை தங்களின் செயல்திறனுக்கேற்ற / விருப்பத்திற்க்கேற்ற முறையில் செயல்படுத்துவதில் தவறாமல் இருப்பது அரசு சார்ந்த சுதந்திரமாகும். மேலும், இவை, மனித உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுடன் இணங்குகிறது.
பாதகமான மனித உரிமை பாதிப்புகளை நிவர்த்தி செய்ய, அவற்றின் தடுப்பு, தணித்தல் மற்றும் பொருத்தமான இடங்களில், நிவாரணம் பெறுவதற்கு போதுமான நடவடிக்கைகளை எடுத்தல்.

மனித உரிமைகளை ஆதரித்து வளர்ப்பதற்கு, வணிக நிறுவனங்கள் இதர பொறுப்புக்கள் மற்றும் செயல்பாடுகளை மேற்கொள்ளலாம். இதன் மூலம், அவர்கள் தங்களது உரிமையை அனுபவித்து மகிழ முடியும். இருப்பினும், தங்களது தொடர்ச்சியாக இயங்கும் செயல்களில், மனித உரிமைகளை மதிக்கவும் மற்றும் மீறாமல் இருக்கவும் முடியாது.

வணிக நிறுவனங்கள், அரசின் மனித உரிமை சார்ந்த கடமைகளை மேற்க்கொள்ளும் நடவடிக்கையையும், சட்டத்தின் நம்பகத்தன்மையையும் குறைத்து மதிப்பிட இயலாது.

**12. மனித உரிமைகளை மதிக்கும் வணிக நிறுவனங்களின் பொறுப்பாவது, சர்வதேச அங்கீகாரம் பெற்ற மனித உரிமையில் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் குறைந்தபட்ச சர்வதேச மனித உரிமை மசோதா மற்றும் வேலையிடத்தில் வரைமுறைப்படுத்தப்பட்ட உரிமைகள் குறித்து தொழிலாளர் அமைப்பின் பிரகடனம் ஆகியவற்றை குறிக்கும்.**

### விளக்கவுரை :

சர்வதேச அங்கீகாரம் பெற்ற அனைத்து மனித உரிமைளிலும், வணிக நிறுவனங்களின் தாக்கம் ஏற்படுத்தும் என்பதால், அனைத்து உரிமைகளையும் அவர்கள் மதிக்க வேண்டியது அவசியம். நடைமுறையில், சில மனித உரிமைகள், தொழில் சார்ந்த சூழல்களுக்கேற்ற அதிக பாதிப்பு தன்மையுள்ளதால், அவற்றின் மேல் தனி கவனம் செலுத்தப்படும். அதே சமயம், சூழ்நிலைக்கேற்ப மாறுபட்ட தன்மையுள்ளதால் அனைத்து மனித உரிமைகளையும் குறிப்பிட்ட கால அவகாசத்தில் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.



சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளின் அதிகாரபூர்வமான பட்டியல், சர்வதேச மனித உரிமைகள் மசோதாவில் உள்ளது. அதில், மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனம் மற்றும் குறியீடப்பட்ட முக்கிய ஆவணங்கள் உள்ளடங்கியுள்ளன: சர்வதேச குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை (ICCPR) , சர்வதேச பொருளாதார, சமூக மற்றும் குடிசார் உரிமைகள் உடன்படிக்கை (ICESCR) மற்றும் வேலையிடத்தில் அடிப்படை கொள்கைகள் மற்றும் உரிமைகள் மீதான அறிக்கையில் குறிப்பிட்ட எட்டு ஐஎல்ஓ வின் (ILO) முக்கிய அடிப்படை மரபுகள், வேலை செய்யும் உரிமைகள் பற்றிய பிரகடனத்தில் உள்ளடங்கியுள்ளது. இந்த அளவுகோளை அடிப்படையாகக் கொண்ட மற்ற சமூக செயற்பாட்டாளர்கள், நிறுவனங்கள் ஏற்படுத்தும் மனித உரிமை மீறல்களின் பாதிப்பினை மதிப்பிடுவார்கள். மனித உரிமைகளை மதிப்பது வணிக நிறுவனங்களின் கடமையாகும். இது சட்ட பொறுப்பு மற்றும் அமலாக்கத்திலிருந்து தனித்துவம் பெற்றது. பொதுவாக இவை, அவற்றின் எல்லைகளுக்குள் தேசிய சட்டம் மூலம் வரையறுக்கப்பட்டுள்ளன.

சூழ்நிலைக்கேர்ப்ப, வணிக நிறுவனங்கள் கூடுதல் தரங்களை நிர்ணயம் செய்யலாம். உதாரணத்திற்கு, வணிக நிறுவனங்கள், அதிக மனித உரிமை மீறல் பாதிப்பிற்க்குட்பட்ட, சிறப்பு கவனத்திற்குரிய குறிப்பிட்ட குழுக்களை சார்ந்த தனி நபர்கள், சமூகம் அல்லது மக்களை மதித்து, கருத்தில் கொண்டிருக்கவேண்டும். இதன் அடிப்படையில், தனி நபர்களின் உரிமைகளை ஐக்கிய நாடுகள் மேலும் விரிவுபடுத்தியுள்ளது. இதில் தனி நபர்கள், பெண்கள், தேசிய அல்லது இன, மத மற்றும் மொழி சிறுபான்மையினர், குழந்தைகள், ஊனமுற்றோர், புலம்பெயர்ந்த தொழிலாளர் மற்றும் அவர்களது குடும்பம் ஆகியவை அடங்கும். மேலும், பிரச்சினைகள் ஏற்படும் காலங்களில், நிறுவனங்கள் சர்வதேச மனிதநேய சட்டத்தை மதிக்க வேண்டும்.

**13. மனித உரிமைகளை மதிக்கும் பொறுப்பிற்குரிய வணிக நிறுனங்கள்:**

(a) மனித உரிமை மீறல்களில் பாதகமான தாக்கங்களை உருவாக்கும் செயல்களை தவிர்த்து, அவ்வகை தாக்கங்கள் ஏற்படும்போது, அவற்றிற்கு தங்கள் நடவடிக்கையின் மூலம் தீர்வு காணுதல்;

(b) வணிக உறவுகள் சார்ந்த நேரடி நடவடிக்கைகள், தயாரிப்புகள் அல்லது வணிக உறவுகள் மூலமான சேவைகளால் ஏற்படும் மனித உரிமை பாதிப்புகளை தடுக்க அல்லது குறைக்க முயல வேண்டும். ஒருவேளை அப்பாதிப்புக்கள், தங்களால் ஏற்படாவிட்டாலும், அவற்றை தடுக்க அல்லது குறைக்க முயல வேண்டும்.

### விளக்கவுரை :

மனித உரிமைகளில் பாதகமான தாக்கத்தை ஒரு வணிக நிறுவனம், நேரிடையாக தங்கள் செயல்பாடுகள் மூலமாகவோ அல்லது அவர்களது வணிக தொடர்புடைய மற்றவர்கள் மூலமாகவோ, ஏற்படுத்தக்கூடும். வழிகாட்டு கொள்கை 19ல், இத்தகைய சூழ்நிலையில் வணிக நிறுவனமானது எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான தாக்கங்களை மேலும் விரிவாக விவரிக்கிறது. இந்த வழிகாட்டு கொள்கையின்படி ஒரு தொழில் நிறுவனத்தின் “செயல்பாடுகள்” என்பது “செயல்பட்டவை” மற்றும் “செயல்படாதவை” இவை இரண்டையும் குறிக்கிறது. மேலும் அதன் “வணிக உறவுகள்” என்பது, அதன் வணிக கூட்டாளிகளுடனான உறவுகள், வணிக தொடர்பில் உள்ள நிறுவனங்கள் மற்றும் அரசு அல்லது அரசு அல்லாத, அதன் வணிகத்தோடு நேரடி தொடர்புடைய தொழில் நிறுவனங்கள், தயாரிப்பவைகள் அல்லது சேவைகளும் அடங்கும்.

**14. மனித உரிமைகளை மதிக்க வேண்டிய கடமை அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் பொருந்தும். இதில், அந்நிறுவனத்தின் அளவு, துறை, செயல்படும் சூழல், உரிமம் மற்றும் அதன் கட்டமைப்பு போன்றவை பொருந்தாது. எவ்விதமாக இருந்தாலும், மனித உரிமை சட்டத்தை மதிக்க வேண்டியது அந்நிறுவனத்தின் கடமையாகும். இருப்பினும், அந்நிறுவனங்கள் பொறுப்பினை சந்திக்கும் கூட்டு வழிமுறைகளின் அளவுகோல் மேற்கண்ட காரணிகளுக்கு ஏற்பவும், நிறுவனம் ஏற்படுத்திய மனித உரிமைகள் மீதான பாதகமான தாக்கங்களின் தீவிரத்தன்மையை பொறுத்து மாறுபடும்.**

## விளக்கவுரை :

மனித உரிமைகளை மதிக்கும் தன் கடமையில், ஒரு வணிக நிறுவனம் ஈடுபடுவது என்பது, மற்ற காரணிகளை விட, அதன் அளவு ஒரு முக்கிய காரணியாக இருக்கும். பெரிய நிறுவனங்களை விட, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களிடம் குறைந்த திறன், முறைப்படி அமையாத நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக கட்டமைப்பு குறைவாக இருக்கும் என்பதால் அவற்றின் கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் வேறு வடிவங்கள் எடுக்கும். ஆனால், சில சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில், மனித உரிமைகள் மீது தீவிரமான தாக்கங்கள் ஏற்படும் என்பதால் அதன் அளவை கணக்கில் கொள்ளாமல் அந்த குறைபாடுகளை சரி செய்யும் முறைகள் தேவை. தாக்கத்தின் தீவிரம், அவற்றின் அளவு, நோக்கம் மற்றும் சீர்படுத்தவியலாத தன்மை ஆகியவற்றை பொறுத்து தீர்மானிக்கப்படும். ஒரு வணிக நிறுவனத்தின் மனித உரிமையை மதிக்கும் பொறுப்பு என்பது ஒரு குழுவாகவோ அல்லது தனியாகவோ செயல்படும் அளவினைப் பொறுத்து அமையும். எனினும், மனித உரிமைகளை மதிக்கும் பொறுப்பு அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் முழுமையாகவும், சமமாகவும் இருக்க வேண்டும்.



**15. மனித உரிமைகளை மதிப்பதற்கு பொறுப்புள்ள வணிக நிறுவனங்கள், அதன் அளவு மற்றும் சூழ்நிலைக்கேற்ப, அதன் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை கொண்டிருத்தல் வேண்டும். அவற்றில் :**

(a) மனித உரிமைகளை மதிப்பதற்கான கொள்கை உறுதிபாடுகளை ஏற்படுத்திக்கொள்ளுதல்;

(b) மனித உரிமைகளில் ஏற்படும் பாதிப்புகளை கண்டறிந்து, அதனை தவிர்த்து, தாக்கத்தைக் குறைத்து, அவற்றை நீக்குவதற்கு தேவையான சரியான மனித உரிமை செயல்முறைகளை ஏற்படுத்துதல்;

(c) நிறுவனத்தின் பங்களிப்பு மற்றும் செயல்பாட்டினால், மனித உரிமை மீறல்கள் மீது ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு உரிய நிவாரணங்களைக் கண்டறிந்து தேவையான செயல்முறைகளை உருவாக்குதல்;

## விளக்கவுரை :

வணிக நிறுவனங்கள், மனித உரிமையை மதித்தல் என்பதை அறிந்து அதனை வெளிப்படுத்த வேண்டும். அதற்கான சில கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் அவ்விடத்தில் கொண்டிருக்காவிட்டால், அது இயங்க இயலாது. பின்வரும் கொள்கைகள் 16 முதல் 24 வரை, இவற்றை விவரிக்கின்றன.

# B. செயல்பாட்டு கொள்கைகள்:

# கொள்கை அர்ப்பணிப்பு

**16. மனித உரிமைகளை மதிப்பதற்கான பொறுப்பில் உள்ள வணிக நிறுவனங்கள், அவற்றை நிறைவேற்ற அதற்கான கொள்கைகளை அறிக்கையின் மூலம் உறுதியுடன் வெளிப்படுத்துதல். அக்கொள்கை அறிக்கையானது:**

(a) தொழில் நிறுவனத்தின் முதன்மை அதிகாரியால் அங்கிகறிக்கப்பட்டிருக்க வேண்டும்;

(b) உள் மற்றும் வெளி நிறுவன நிபுணரால் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்;

(c) நிறுவனத்தின் மனித உரிமை எதிர்பார்ப்புகள் மற்றும் பாதுகாப்பிற்கான வழிமுறைகள், நிறுவனத்தை சார்ந்திருக்கும் பணியாளர்கள், வணிக கூட்டாளிகள், நிறுவன உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளை இணைத்து நேரடியாக சார்ந்திருக்கும்;

(d) நிறுவனத்தினுள் மற்றும் வெளி நபர்கள், வணிக பங்குதாரர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்கள் அனைவருக்கும் வெளிப்படையாக தெரிவித்து, கிடைக்கப் பெற்றிருக்க வேண்டும்;

(e) நிறுவனத்தின் செயல்பாட்டு கொள்கைகள் மற்றும் வழிமுறைகள், அந்நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் உள்ளிருந்து பிரதிபலித்து தெரிவித்திருக்க வேண்டும்.

## விளக்கவுரை :

“அறிக்கை” என்பது பொதுவாக, ஒரு நிறுவனம் தனது பொறுப்புக்கள், கடமைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை எந்த முறையில் செயல்படுத்துகின்றன என்பதை வெளிப்டையாகக் கூறுவது.

வணிக நிறுவனத்தின் செயல்பாட்டு சிக்கல்களை பொறுத்து, தெரிவித்து உறுதிசெய்யப்பட்ட இவ்வறிக்கை நிபுணத்துவ நிலையை கொண்டிருக்க வேண்டும். நிபுணர்களின் சேவையை பலதரப்பட்ட வளங்களான, நம்பகமான நிகழ்நிலை (online), எழுதப்பட்ட ஆதாரங்கள் அல்லது நிபுணர் ஆலோசனைகள் போன்றவை மூலம் பெறலாம்.

இந்த ஒப்புதல் அறிக்கை, பொது மக்களுக்கு கிடைக்கும் நிலையில் இருக்க வேண்டும். நிறுவனங்கள், தங்களின் ஒப்பந்தக்காரராண மற்ற நிறுவனங்கள், மாநில பாதுகாப்பு படைகள், முதலீட்டாளர்கள் மற்றும் மனித உரிமை பாதிப்பிற்குள்ள மக்கள், நேரடியாக தொடர்புடையவர்கள் ஆகியோருக்கு தெளிவாக திறம்பட தொடர்புகொண்டு தெரிவிக்க வேண்டும்.

தங்கள் நிறுவனத்திற்க்குள் சம்பந்தப்பட்ட கொள்கைகள், வழிமுறைகள் மற்றும் அறிக்கைகளில் பொறுப்புகளை எடுத்துரைக்கும் கோட்பாடுகள் மற்றும் அமைப்புகள் வரையறைக்கப்பட வேண்டும். மேலும், சம்பந்தப்பட்ட வணிக நடைமுறைகளில் ஈடுபடும் நபர்களுக்குத் தேவையான பயிற்சிகளும் அளிக்க வேண்டும்.

அரசு கொள்கை இணக்கத்தில் எவ்வாறு ஈடுபடுகின்றதோ அவ்வாறே பொறுப்புள்ள வணிக நிறுவனங்கள் மனித உரிமைகளை மதிப்பதற்கும், அவர்களது வணிக நடவடிக்கைகளை தொழில் ரீதியாக கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் நடைமுறைப்படுத்துவதில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் பாடுபட வேண்டும். உதாரணத்திற்கு; ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சம்பளம் மற்றும் செயல்திறன் ஊக்கத்தொகை, அந்நிறுவனத்தின் கொள்முதல் நடைமுறைகள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு ஆபத்துள்ள இடங்களில் அவற்றை எடுத்துரைக்கும் நடவடிக்கைகள் சேர்க்கப்பட வேண்டும்.

இவ்வறிக்கை, அந்நிறுவனத்தின் முதன்மை மேலாளர் தொடங்கி அனைத்து செயல்பாடுகளிலும் தகுந்த முறையில் உட்கொண்டு வரையறுக்கப்பட வேண்டும். இல்லையெனில், மனித உரிமைகள் விழிப்புணர்வு அற்ற, மதிப்பற்ற நிறுவனமாக செயல்படுகின்றதாக கருதப்படும்.

# மனித உரிமைகளை தீவிரமாக கண்காணித்தல் :

**17. ஒரு வணிக நிறுவனம், தனது செயல்பாடுகளால் ஏற்படும் மனித உரிமை பாதிப்புகளை கண்டறிந்து தவிர்த்து, கட்டுப்படுத்தி, சரி செய்வதற்காக தொடர்ந்து மனித உரிமை பாதுகாப்பதை தீவிரமாக கண்கானித்தல் அவசியம். இதில் நடைமுறையில் உள்ள மற்றும் நடைபெற சாத்தியமுள்ள மனித உரிமைகள் மீறல் தாக்கங்களை அறிந்து கொண்டு அத்தகவலை ஒருங்கிணைத்து நடவடிக்கை எடுப்பதும், அந்நடவடிக்கைகளின் விளைவுகளை ஆய்வு செய்வதும், அவற்றை எவ்வாறு கையாள்வது மற்றும் அவ்வகை தாக்கங்கள் எவ்வாறு தீர்க்கப்பட்டது என்றும் விவரிக்க வேண்டும். மனித உரிமைகளின் தீவிர கண்காணிப்பாவது:**

(a) வணிக நிறுவனத்தின் நடவடிக்கைகள் அல்லது அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களின் செயல்பாடுகள், மற்றும் உற்பத்தி பொருட்கள் அல்லது சேவைகளின் நேரடி அல்லது மறைமுக தாக்கத்தை சேர்த்திருக்க வேண்டும்;

(b) வணிக நிறுவனத்தின் அளவு மற்றும் இயங்கும் சூழல் மற்றும் மனித உரிமைகள் மீறல்களின் தாக்கத்தின் தன்மையை கொண்டு மாறுபடும்;

(c) வணிக நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் அதன் செயல்படும் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப, மனித உரிமை மீறல்களுக்கான ஆபத்து உள்ளதால், அவற்றை கருத்தில் கொண்டு தொடர்ச்சியான நிகழ்வாக செயல்பட வேண்டும்.



# விளக்கவுரை :

இந்த கொள்கை, மனித உரிமைகளை தொடர்ந்து கண்காணிக்க தேவையான அளவுகோளை வரையறுக்கிறது. கொள்கை எண் 18 முதல் 21 வரை அவற்றின் முக்கிய விஷயங்களை விரிவாக தெரிவிக்கிறது.

வணிக நிறுவனத்தின் சாத்தியமான மனித உரிமை தாக்கங்களில் மனித உரிமை அபாயங்கள் ஒன்றாகும். இத்தாக்கங்களை தவிர்ப்பது அல்லது குறைப்பதன் மூலம் அவற்றை எதிர்கொள்ளலாம். ஆனால் ஏற்கனவே நிகழ்ந்த தாக்கங்களை குறைதீர்க்கும் முறைக்கு உட்படுத்த வேண்டும் (கொள்கை 22)

மனித உரிமைகளை தொடர்ந்து கண்காணிப்பதென்பதை பரந்த அளவில் அந்நிறுவன இடர் மேலாண்மை அமைப்பில் சேர்ப்பது என்பது அந்நிறுவனத்தின் பொருட்களை நிர்வகிப்பதில் உள்ள அச்சுறுத்தல்களை அறிவது மட்டுமல்லாது அவற்றை நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு சேர்ப்பதாகும்.

மனித உரிமையை கண்காணிக்கும் வழிமுறைகளை, அந்நிறுவனம் ஒரு புது முயற்சி அல்லது தொழில் முறை உறவை நிறுவும் சமயத்திலேயே ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், அந்த நிறுவனம் ஒரு புதிய ஒப்பந்தம் கையெழுத்திடும்போதே மனித உரிமையில் உள்ள அபாயங்களை அதிகரிப்பதோ அல்லது குறைப்பதோ சாத்தியப்படுவதால் மற்ற நிறுவனங்களை இணைக்க அல்லது கையகப்படுத்தும்போது இந்த நெறிமுறைகளை அதில் சேர்க்க முடியும்.

ஒரு தொழில் நிறுவனத்திற்கு சொந்தமாக, பல இடங்களில் நிறுவனங்களோ அல்லது கிளைகளோ இருக்கும்போது, அந்நிறுவனத்தால் அனைத்து கிளைகளிலும் மனித உரிமை மீறல்கள் தாக்கங்களை தொடர்ந்து கண்காணிப்பது கடினமான ஒன்றாகும். அப்போது அந்நிறுவனம், மனித உரிமை மீறல்கள் தாக்கம் அதிகம் இருக்கும் பொதுவான இடங்களை தேர்வு செய்து, நிறுவனத்திற்கு பொருட்களை தருபவர்களோ, வாடிக்கையாளரின் இயங்கும் சூழல் தயாரிப்பு அல்லது சேவைகள் அல்லது மற்ற தொடர்புடையவர்கள் போன்றவற்றை கண்டறிந்து, தேர்வுசெய்து, முன்னுரிமை கொடுத்து, அவற்றின் மனித உரிமை மீறல்களை தொடர்ந்து கண்கானிக்கலாம்.

நிறுவனத்துடன் தொடர்புடைய மற்றவர்களின் மூலம் எதிர்மறையான மனித உரிமைகள் மீறல் ஏற்படுவதற்கு அந்நிறுவனம் காரணமாக இருந்தாலோ அல்லது இருப்பதாகக் கருத்தப்பட்டாலோ, அப்பொழுது அந்நிறுவனம் "உடந்தையா" என்ற கேள்வி எழும். உடந்தை என்பதற்கு சட்டபூர்வமான மற்றும் சட்டபூர்வமற்ற அர்த்தங்கள் உள்ளன. "சட்டபூர்வமற்றது" என்பது வணிக நிறுவனங்கள் அதன் தொடர்புடைய மற்றொருவரின் நடத்தையில் "உடந்தை" என்று கொள்ளலாம். உதாரணத்திற்கு, அந்த மற்றொரு நிறுவனம் செய்யும் துஷ்ப்ரயோகத்தினால், இந்நிறுவனத்திற்கு ஏற்படும் பயண்களை குறிக்கும்.

சட்டபூர்வமாக, பெரும்பாலான தேசிய அதிகார வரம்புகள், ஒரு குற்றத்தில் உடந்தையாக இருப்பதை தடை செய்கிறது, மற்றும் பல நாட்டில் அது போன்ற சந்தர்ப்பத்தில் அந்நிறுவனம் குற்றவியல் பொறுப்பிற்கு உள்ளாக்கப்படுகிறது. அதே போல, ஒரு நிறுவனம், ஒரு தீங்கிற்கு துணை போனதாகக் கருத்தப்பட்டால், மனித உரிமை சட்டத்தில் கூறப்படாதபோதும், அதன் மீது சிவில் நடவடிக்கை எடுக்கலாம். சர்வதேச குற்றவியல் சட்ட துறையில், ஒரு குற்றத்திற்கு உதவுவது மற்றும் உடந்தையாயிருப்பது அந்த குற்றத்திற்கு கணிசமான விளைவை ஏற்படுத்துவதற்கு உதவி செய்வது அல்லது ஊக்குவிப்பதற்கு சமம் என்று கூறப்பட்டுள்ளது.

தேவையான நடவடிக்கைகளை மனித உரிமை மீறல் மீது தொடர்ந்து எடுப்பதன் மூலம், ஒரு நிறுவனம் தங்களுக்கு எதிரான இவ்வாறான சட்ட கூற்றுக்களை எதிர்கொண்டு, அவ்வகையான மனித உரிமை மீறல்களில் தாங்கள் எவ்வகையிலும் ஈடுபடவில்லை என்பதை நிரூபிக்க முடியும். அதே சமயம். இத்தகைய விடாமுயற்சியுடன் செயல்படும் வணிக நிறுவனங்கள், மனித உரிமை மீறல்களுக்கு காரணமான அல்லது பங்களிக்கும் பொறுப்பிலிருந்து விடுபடலாம் என்று கருதிவிட முடியாது.

**18. மனித உரிமையில் உள்ள அச்சுறுத்துதளை மதிப்பிட மற்றும் தன்மையறிய, வணிக நிறுவனங்களானது தங்கள் வணிகம் அல்லது வர்த்தக உறவுகளால் ஏற்படக்கூடிய பாதகமான / உண்மையான மனித உரிமைகள் மீறல்களை முன்கூட்டியே அடையாளம் கண்டறிதல். இதற்கு:**

(a) அந்நிறுவனம் மற்றும் / அல்லது வெளிப்புற மனித உரிமை நிபுணர்களிடம் ஆலோசனை பெறுதல்;

(b) பாதிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்களுடன், நிறுவனத்தின் அளவு, தன்மை மற்றும் சூழலைப் பொறுத்து, அர்த்தமுள்ள ஆலோசனைகள் மேற்க்கொள்ளுதல்.



# விளக்கவுரை :

மனித உரிமைகள் மீறாமல் பாதுகாக்க, முதலில் அந்நிறுவனம் தங்களால் மற்றும் சாத்தியமான உண்மையான மீறல்களை மதிப்பீட்டு, கண்டறிந்து செயல்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட சூழலில், குறிப்பிட்ட மனிதர்களின் மீது ஏற்படும் குறிப்பிட்ட தாக்கங்களை அறிந்துக் கொள்வதே இதன் நோக்கமாகும். இதில், முடிந்த அளவு, வணிகத்தை துவங்குவதற்கு முன்னர் மனித உரிமைகளைப் பற்றி தெரிந்துக் கொள்வது, யார் பாதிக்கப்படுவார்கள் என்பதை அறிவது, தேவையான மனித உரிமை தரங்கள் மற்றும் பிரச்சனைகளை பட்டியலிட்டுக் கொள்வது மற்றும் இவ்வாறு அறியப்பட்ட மனித உரிமை தாக்கங்களில், தொடங்கவுள்ள தங்களின் செயல்பாடுகள் மற்றும் வணிக கூட்டாளிகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை திட்டமிடல் ஆகியவை அடங்கும்.

இந்த நடைமுறையில், ஆண்கள் மற்றும் பெண்கள் வெவ்வேறாக எதிர்கொள்ளும் பாதிப்புகள், ஒரு குழுவில் இருக்கும் தனி மனிதர்கள் அல்லது ஒரு சமுதாயத்தில் ஏற்படக்கூடிய பாதிப்பு அல்லது தனிமைப்படுத்தப்படும் ஆபத்து அதிகரிக்கக்கூடிய விஷயங்களில், வணிக நிறுவனங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மனித உரிமைகள் மதிப்பிடுவதற்க்கான செயல்முறையை மற்ற செயல்முறைகளுக்குள் அதாவது இடர் மதிப்பீடுகள் அல்லது சுற்றுச்சூழல் மற்றும் சமுதாய தாக்கங்களின் மதிப்பீடு போன்றவற்றில் இணைக்கும்பொழுது சர்வதேச அளவில் பரிந்துரைக்கப்பட்ட மனித உரிமைகள் அனைத்தையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும். ஏனென்றால் வணிக நிறுவனங்கள் இந்த உரிமைகள், அவ்வபோது தாக்கக்கூடிய சாத்தியம் உள்ளதால், கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

மனித உரிமை சூழ்நிலைகள் மாறுபட்டதால், மனித உரிமைகள் தாக்கத்தை அடிக்கடி, இடைவெளிவிட்டு மதிப்பிட வேண்டும் அதாவது, புது நடவடிக்கை மேற்கொள்ளும்போது அவற்றில் முக்கிய முடிவுகள் எடுக்கும் முன் ) உதாரனத்திற்க்கு, சந்தையில் நுழைதல், பொருள் அறிமுகம், கொள்கை மாற்றம், அல்லது வணிகத்தில் அதிக அளவு மாற்றம்) வணிகம் இயங்கும் சுற்றுச்சூழல் (உதாரனத்திற்க்கு, அதிகரிக்கும் சமூக அழுத்தங்கள்) போன்றவற்றால் எதிர்நோக்கி வணிக செயல்பாடு முழுவதிலும் அவ்வப்போது மனித உரிமைகள் மதிப்பீடு தொடர்ந்து செய்ய வேண்டும்.

வணிக நிறுவனங்கள், தங்களால் ஏற்படும் மனித உரிமை பாதிப்புக்களை துல்லியமாக கணிக்க, அவ்வாறு பாதிக்கப்படக்கூடிய அவர்களது தொழில் ரீதியான பங்குதாரர்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடியவற்றை (மொழி மற்றும் பிற காரணங்கள்) கண்டறிந்து, நீக்க அவர்களுடன் நேரடியாக கலந்து ஆலோசித்து செயல்பட முயற்சிக்க வேண்டும். அவ்வாறு பேச முடியாத சமயங்களில், மனித உரிமை காப்பாளர்கள் மற்றும் சமுதாயத்தில் உள்ள நம்பிக்கையான தனி நிபுணர்களை ஆலோசிப்பது போன்ற ஏற்புடைய வேறு மாற்று வழிகளை அந்நிறுவனங்கள் யோசிக்க வேண்டும். மனித உரிமை பாதிப்புகளை மதிப்பீடு செய்வதன் மூலம், மனித உரிமையை தொடர்ந்து கண்காணிப்பதற்கு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு வழி வகுக்கிறது.

**19. பாதகமான மனித உரிமை தாக்கங்களை தடுப்பதற்கும் அவற்றைக் குறைப்பதற்கும், வணிக நிறுவனங்கள் அந்த தாக்கங்களை மதிப்பீடு செய்ததைத் தொகுத்து அதன்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.**

**(a) முழுமையான பயனுள்ள ஒருங்கிணைப்பு என்பது:**

(i) இவ்வகை தாக்கங்களை சரி செய்யும் பொறுப்பை அந்த நிறுவனத்தின் சரியான துறை மற்றும் நபர்களிடம் அளித்தல்;

(ii) நிறுவனத்திற்குள் முடிவெடுக்கும் அதிகாரம், நிதி ஒதுக்கீடு மற்றும் மேற்பார்வை முறைகள் ஆகியவை இவ்வகை தாக்கங்களுக்கு சரியான தீர்வை அளிக்கும்.

**(b) சரியான நடவடிக்கை மாறுபடும் காரணங்கள்:**

(i) ஒரு நிறுவனத்தின் காரணமாக அல்லது அதன் பங்களிப்பினால் பாதகமான தாக்கம் ஏற்படுகிறதா அல்லது அதன் செயல்பாடுகள், தயாரிப்புக்கள் அல்லது சேவைகள் மூலம் ஏற்படுகிறதா;

(ii) பாதகமான தாக்கத்தை சரி செய்ய அந்நிறுவனத்தின் செல்வாக்கு சார்ந்ததாகும்.

## விளக்கவுரை :

மனித உரிமைகள் தாக்கங்களை, மதிப்பீட்டிலிருந்து கண்டுபிடிப்பிணை, வணிக நிறுவனத்தில் கிடைமட்ட ஒருங்கிணைப்பு மூலம், அதன் மனித உரிமைகள் கொள்கை உறுதிப்பாடு தொடர்புடைய அனைத்து வணிக செயல்பாடுகளிலும் உட்பொதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே பயனுள்ளதாக இருக்கும். தங்களது மதிப்பீட்டு கண்டுபிடிப்புகள் அனைத்தையும் சரியாக புரிந்துக்கொண்டு, அதற்கு தேவையான முக்கியத்துவம் அளித்து அவற்றை பின்பற்றி நடப்பதற்கு இது மிகவும் அவசியமாகும்.

மனித உரிமைகள் தாக்கங்களை மதிப்பிடுவதில், வணிக நிறுவனங்கள் உண்மையான மற்றும் சாத்தியமான பாதகமான விளைவுகளைத் தேடும். சாத்தியமான தாக்கங்கள், வணிக நிறுவனத்தில் கிடைமட்ட ஒருங்கிணைப்பு மூலம் தடுக்கப்பட வேண்டும் அல்லது குறைக்கப்பட வேண்டும். அதே நேரத்தில், உண்மையான பாதிப்புகள் - ஏற்கனவே ஏற்பட்டவை - தீர்வுக்காண்பதற்கான ஒரு பாடமாக இருக்க வேண்டும் (கொள்கை 22).

ஒரு நிறுவனத்தில் பாதகமான மனித உரிமை தாக்கங்கள் ஏற்படும்போது அல்லது ஏற்படக்கூடும் என்றால், அந்நிறுவனம் அவ்வாறு நடைபெறாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பாதகமான மனித உரிமை தாக்கங்களுக்கு, ஒரு நிறுவனம் காரணமாக இருந்தாலோ அல்லது இருக்கக்கூடுமென்றாலோ, அந்நிறுவனம் அதனை நிறுத்துவதற்கு அல்லது தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து, முடிந்தளவு அந்நிறுவனத்தின் அதிகார திறனைப் பயன்படுத்தி, தாக்கத்தை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஒரு நிறுவனம், அதிகார திறன் மூலம் மாற்றங்களை ஏற்படுத்தி, சரி செய்ய முடியும் என்றால் அந்நிறுவனத்தில் தேவையான குறை தீர்க்கும் செயல்பாடுகள் உள்ளன என்று பொருள்.

ஒரு வணிக நிறுவனம், பாதகமான மனித உரிமைகள் தாக்கத்திற்கு காரணமாக இல்லாதபோதும், அந்த தாக்கம் அந்நிறுவனத்தின் செயல்முறைகள், தயாரிப்புக்கள், அல்லது சேவைகளில் வணிக தொடர்புடைய மற்ற நிறுவனங்களின் வாயிலாக நேரிடையாக பாதிக்கும்போது, அந்நிலைமை இன்னும் பிரச்சினைக்குரியதாக மாறும். அப்பொழுது, அந்நிறுவனத்தின் சரியான நடவடிக்கை என்பது, அந்நிறுவனம் சம்பந்தப்பட்ட மற்ற நிறுவனங்களிடம் ஏற்படுத்தியுள்ள திறன், முக்கியத்துவம், துஷ்ப்ரயோகத்தின் தீவிரம் மற்றும் தங்களது வணிக உறவை முறித்துக் கொள்வதனால், மனித உரிமைகளில் ஏற்படும் பாதிப்புகள் போன்ற விஷயங்களைப் பொறுத்தது.

மனித உரிமை மீறல் மற்றும் அதன் விளைவுகள் அதிக சிக்கலாக மாறும்போது, வணிக நிறுவனம், நிபுணரின் ஆலோசனையை பெற்று சூழ்நிலையை எதிர்க்கொள்ள அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

வணிக நிறுவனத்திற்கு பாதகமான பாதிப்புகளை தடுக்கவோ அல்லது குறைக்கவோ திறன் இருந்தால் அதனை அந்நிறுவனம் செயல்படுத்த வேண்டும். ஒரு வேளை, அந்நிறுவனத்திற்கு திறன் குறைவாக இருந்தால், அவற்றை அதிகரிக்க பல வழிகள் இருக்கக்கிறது. உதாரணத்திற்கு, சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் திறமையை அதிகரிக்க உதவுவது அல்லது மற்ற சலுகைகள் தருவது அல்லது வேறு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் போடுவது போன்றவையாகும்.

சில நேரங்களில், தொழில் நிறுவனங்கள் பாதகமான தாக்கங்களை தடுக்கவோ அல்லது குறைக்கவோ முடியாததோடு தங்களது திறனையும் அதிகரிக்க முடியாமல் இருக்கக்கூடும். இது போன்ற சந்தர்ப்பத்தில், ஏற்படக்கூடிய பாதகமான மனித உரிமை தாக்கங்களை கணக்கில் கொண்டு, அந்நிறுவனம் சம்பந்தப்பட்ட வணிக உறவை முடித்துக்கொள்ள முயல வேண்டும்.

ஒரு வேளை அந்த வணிக உறவு “மிகவும் முக்கியமான” ஒன்றாக இருக்குமேயானால் அதனை முறிப்பது அந்நிறுவனத்திற்கு மேலும் சவாலாக இருக்கும். சம்பந்தப்பட்ட உறவு நிறுவனம், தாய் நிறுவனத்தின் வணிகத்திற்கு அவசியமான பொருட்கள் அல்லது சேவைகளை அளிக்கும்போதும், அதற்கு சரியான மாற்று நிறுவனம் இல்லை என்ற நிலை ஏற்படும்போதும், அந்த வணிக உறவு முக்கியம் என்று கருதப்படும். இந்நிலையில், பாதகமான மனித உரிமை தாக்கங்களையும் கருத்தில் கொண்டு, துஷ்ப்ரயோகம் அதிகரிக்கும்போது, தொழில் நிறுவனம் தனது உறவை சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் முறித்துக்கொள்வதை பற்றி விரைவாக முடிவெடுக்க வேண்டும். எவ்வாராக இருந்தாலும், துஷ்ப்ரயோகம் தொடரும் வரை, அந்த நிறுவனம் வணிக உறவை வைத்திருக்கும்வரை, தாய் நிறுவனம், தொடர்ந்து தன் தாக்கத்தை குறைக்க பாடுபடுவதை நிரூபிப்பது மட்டுமல்லாமல், தொடர்ந்து அந்நிறுவனத்துடன் உறவில் இருப்பதால், தனது மரியாதை, நிதி அல்லது சட்ட விளைவுகளை சந்தித்தாக வேண்டும்.

**20. பாதகமான மனித உரிமைகள் தாக்கங்கள் சரி செய்யப்படுகிறதா என்பதை உறுதி செய்ய, தங்களுடைய நடவடிக்கைகளின் செயல் திறனை கண்காணிக்க வேண்டும். அவ்வாறு கண்காணிப்பதற்கு :**

(a) பொருத்தமான தரம் மற்றும் அளவு குறிக்காட்டிகளின் அடிப்படையில் இருத்தல்;

(b) பாதிக்கப்பட்ட பங்குதாரர்கள் மற்றும் நிறுவனத்தின் உள்ளும் வெளியிலும் பெறப்பட்ட கருத்துக்களை அடிப்படையாக கொண்டிருத்தல்.

## விளக்கவுரை :

ஒரு வணிக நிறுவனம், அதன் மனித உரிமை கொள்கைகளை உகந்த முறையில் செயல்படுத்துகிறதா, அடையாளம் காணப்பட்ட மனித உரிமை பாதிப்புகளுக்கு திறம்பட செயல்பட்டதா மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஊக்குவிக்கிறதா என்பதை கண்காணித்தல் அவசியம். வணிக நிறுவனங்கள் தங்கள் செயல்திறனை மேம்படுத்த, அதிக பாதிப்புக்குள்ளாகும் தனி நபர், ஒதுக்கப்படும் குழுக்கள் அல்லது மக்களிடம் பெறப்படும் கருத்துக்கள் மீது, குறிப்பிட்ட கண்காணிக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

கண்காணிப்பு என்பது, நிறுவனத்தில் உள்ள அனைத்து அறிக்கையின் செயல்பாடுகளில் இணைந்திருக்க வேண்டும். இவையாவன, செயல்திறன் ஒப்பந்தங்கள், மதிப்புரைகள், கணக்கெடுப்புகள், தணிக்கைகள் மற்றும் தேவையான இடங்களில் பாலின பாகுபாடில்லாத தரவுகளை பொருத்தமாக பயன்படுத்துதல்.

செயல்பாடு அளவிலான குறை தீர்க்கும் வழிமுறைகளை, நேரிடையாகப் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து, மனித உரிமைகள் மீதான தொடர் ஆய்வினை மேற்கொள்வது, ஒரு நிறுவனத்தின் முக்கிய நிகழ்வாக இருக்கும். (கொள்கை 29 காண்க)

**21. ஒரு நிறுவனம், மனித உரிமைகள் பாதிப்புகளை எவ்வாறு எதிர்கொள்ளும் என்பதற்கு, குறிப்பாக பாதிக்கப்பட்ட நபர்களோ அல்லது அவர்களை சார்ந்தவரோ இதை குறித்து கேள்வி எழுப்பும்பொழுது, அந்நிறுவனம் தன் நடவடிக்கைகளை வெளிப்படையாக தெரிவிக்க தயாராக இருக்க வேண்டும். வணிக நிறுவனத்தின் செயல்பாடுகளோ அல்லது அதன் சூழல்களோ, மனித உரிமைகள் தாக்கத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் நிலையில், அந்நிறுவனம் அதற்கான தீர்வுகளை ஏற்படுத்தி வைத்திருப்பதை முறையாக தெரிவிக்க வேண்டும். அனைத்து நிகழ்வுகளிலும், இந்த அறிவிப்புகள்**

(a) நிறுவனத்தின் மனித உரிமை தாக்கங்களை எப்பொழுதும் பிரதிபலிக்கும்படி இருப்பதுடன், தேவைப்படுபவர்களுக்கு அவற்றை எந்நேரமும் பெறக்கூடிய வகையில் இருத்தல்;

(b) ஒரு குறிப்பிட்ட மனித உரிமைகள் தாக்கத்திற்கு, அந்நிறுவனம் எடுக்கும் நடவடிக்கைகள் போதுமானதாக இருக்கிறதா என்பதை மதிப்பீடு செய்வதற்கான விபரங்களை அளித்தல்;

(c) அதே சமயம், பாதிக்கப்பட்ட பங்குதாரர்கள், நபர்கள் அல்லது வணிகம் சார்ந்த ரகசியங்களுக்கு இடையூறுகள் ஏற்படாமல் இருத்தல்;

## விளக்கவுரை :

மனித உரிமைகளை மதிப்பதற்கான பொறுப்புணர்சியாவது, ஒரு வணிக நிறுவனம், அதற்க்கேற்ற கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளைக் இயங்குவதன் மூலம், அந்நிறுவனம் நடைமுறையில் மனித உரிமைகளை தானும் மதித்து, தெரிந்து மற்றவர்களுக்கும் தெரிவிப்பதாகும். காண்பித்தல் என்பது தகவல் அரிவித்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன், பாதிப்பிற்கான வாய்புகளுடைய தனிநபர்கள் அல்லது குழுக்கள், மற்றும் முதலீட்டாளர்கள் உட்பட பங்குதாரர்களுக்கு வழங்குதலை குறிக்கும்.

தெரிவித்தல் என்பதில் நேரிடையான சந்திப்புக்கள், இணையவழி பேச்சுவார்த்தைகள், பாதிக்கப்பட்டவர்களுடன் ஆலோசனை மற்றும் முறையான பொது அறிக்கைகள் போன்ற பல வடிவங்கள் கொண்டடிருக்கலாம். வழக்கமான அறிக்கைகளான, ஆண்டு அறிக்கைகள், நிறுவன பொறுப்புகள் / நிலைத்தன்மை அறிக்கைகள், இணையம் மூலம் புதுப்பித்தல் மற்றும் ஒருங்கிணைந்த நிதி மற்றும் நிதி சாரா அறிக்கைகளை இணைப்பதன் மூலம் முறையான அறிக்கையாக உருவாகிறது.

அதிகமான மனித உரிமை தாக்கத்திற்குரிய அச்சுறுத்தல்கள் / அந்நிறுவனத்தின் செயல்பாடுகள் அல்லது இயங்கும் சூழல்கள் போன்றவை இருப்பதால், அந்நிறுவனங்கள் முறையான அறிக்கைகள் வெளியிட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வறிக்கையில், நிறுவனமானது, மனித உரிமைகள் மீது ஏற்படும் பாதகமான பாதிப்புக்களை, எவ்வாறு கண்டறிந்து மற்றும் நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது பற்றியான தலைப்புகளைக் கொண்டு, தகுந்த குறியீட்டுகள் மூலம் விளக்க வேண்டும். தனி நபரின் மனித உரிமைகள் அறிக்கை சரிபார்பதின் மூலம், அதன் பொருள் மற்றும் நம்பகத்தன்மையை பலப்படுத்தும். குறிப்பிட்ட துறைசார்ந்த குறியீடுகள், கூடுதல் விவரங்களை அளித்து உதவலாம்.

# சரிசெய்தல்

**22. ஒரு வணிக நிறுவனம், தாமாகவே அல்லது தங்களால் பாதகமான பாதிப்புக்கள் ஏற்பட்டது என்று கண்டறிந்தால், அதை சரிசெய்வதற்காக முறையான வழிமுறைகளை செயல்படவைக்க ஒத்துழைத்தல்.**

## விளக்கவுரை :

அந்நிறுவனத்தின் சிறந்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகளே கூட, எதிர்பார்த்திராத அல்லது தவிர்க்க முடியாத பாதகமான மனித உரிமை தாக்கங்கள் ஏற்பட ஒரு காரணியாக அல்லது பங்களிக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கலாம்.

அவ்வித சூழ்நிலையை அந்நிறுவனம் கண்டறியும்பொழுது, மனித உரிமைகளை மதித்து பாதுகாப்பதற்காக, அந்நிறுவனமானது ஏற்ற நடவடிக்கைகளையும் மற்றும் அதை சார்ந்த செயல்பாட்டாளர்களுடன் இணைந்து ஈடுபாடுடனும் செயல்பட தேவைப்படுகிறது. வணிக நிறுவனத்தின் நடவடிக்கைகளால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் குறைதீர்ப்பு வழிமுறைகள், கொள்கை எண் 31ல் குறிப்பிட்டபடி, ஒரு முக்கிய அளவுகோளாக அமைந்து, சரி செய்ய உதவுகிறது.

வணிக நிறுவனம் அல்லது அதன் செயல்பாடுகள், மனித உரிமை மீறல்களுக்கு காரணமற்றதாக இருக்க, ஆனால் உற்பத்தி அல்லது வணிக தொடர்புடையவைகள் பாதிப்புக்கு காரணமாக இருந்தால், அவற்றை சரி செய்யும் பொறுப்பானது அந்நிறுவனத்திடம் இல்லை என்றாலும், அவைகளை தீர்வுகாணும் வழிமுறைகளில் பங்குவகிக்கலாம். சில சூழ்நிலைகளில் குற்றங்கள் சுமத்தப்படும்போது, நீதித்துறை செயல்பாடுகளின் ஒத்துழைப்புடன் சரி செய்வது அவசியமாகும். பாதகமான மனித உரிமை தாக்கங்கள், சுமத்தப்பட்ட சர்ச்சைக்குரிய குற்றச்சாட்டுக்களை சரிசெய்வதற்கான தீர்வுகள் மற்றும் அணுகுமுறைகள் பெறுவதற்கான அணுகுதலை, அத்தியாயம் 3-ல் சேர்க்கப்பட்டுள்ளது.



# சூழல்களினாள் ஏற்படும் சிக்கல்கள்

**23. எல்லா சூழல்களிலும், ஒரு வணிக நிறுவனம்:**

(a) அவர்கள் செயல்படும் அனைத்து இடங்களிலும், அங்கு பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை மதித்து, இணங்கி செயல்பட வேண்டும்.

(b) முரண்பட்ட சூழல்களை எதிர்கொள்ளும்போது, அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகளின் கொள்கைகளை மதித்து, செயல்படுவதற்க்கான வழிகளை கண்டறிதல்.

(c) தாங்கள் செயல்படும் அனைத்து இடங்களிலும், ஒட்டுமொத்த மனித உரிமை மீறல்களுக்கு, பங்களித்தல் அல்லது அவற்றிற்கு காரணமாக விளங்குவதை சட்ட இணக்க பிரச்சனையாக கருதுதல்.

## விளக்கவுரை :

ஒரு நிறுவனத்தின் நடவடிக்கைகள் மற்றும் அதனுடைய வணிக கூட்டமைப்பில், சில நாடுகள் மற்றும் உள்ளூர் சூழ்நிலைகள், மனித உரிமை பாதிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தினாலும், அனைத்து நிறுவனங்களுக்கும் தாங்கள் எங்கிருந்து செயல்பட்டாலும், மனித உரிமைகளை மதிப்பதற்கான கடமை அனைவருக்கும் சமமாகும். இந்த உரிமைகள் அனைத்தையும், உள்ளூர் சூழ்நிலையை பொருத்து கடைப்பிடிப்பது இயலாதபோதும், வணிக நிறுவனங்கள் தங்களால் இயன்றளவு சர்வதேச மனித உரிமைகளை அதிகபட்சமாக மதித்து, முயற்சிகொள்ளுவதை நிரூபிக்க முடியும்.

சில செயற்பாட்டு சூழல்களான கலவரங்களால், பாதிப்புக்குள்ளான இடங்கள், மற்றும் அந்நிறுவனத்தின் செயல்பாட்டாளர்களால் (உதாரணத்திற்கு, பாதுகாப்பு படைகள்) ஏற்படுத்தப்பட்ட ஒட்டுமொத்த மனித உரிமை மீறல்களுக்கு, அந்நிறுவனமும் உடைந்தையாக கருதப்படும் எனும் வாய்ப்பு கூடுதலாக உள்ளது. வணிக நிறுவனங்கள், இவற்றை ஒரு சட்ட இணக்க பிரச்சனையாக கருத்தில் கொண்டு, பெருநிறுவனம் (கார்ப்பரேட்) சம்மந்தமான சட்ட பொறுப்பு வலையில், பிராந்திய சிவில் உரிமை கோரல்களால் மற்றும் ரோம் சட்டம் அதிகார வரம்புகளில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வழங்கியிருக்கும் விதிமுறைகளால், விரிவாக்கி இணைந்து செயல்படுவது பெருநிறுவன குற்றவியல் பொறுப்பு.

இவ்வகை சிக்கலான சூழ்நிலையில் வணிக நிறுவனங்கள், அந்த சூழலை மேலும் அதிகரிக்காமல் இருப்பதர்க்கு உறுதி செய்துக்கொள்ள வேண்டும். அந்நிறுவனத்தினுள்ள நிபுணர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் கலந்து செயல்பாட்டு ஆலோசனைகள் பெறுவது மற்றுமன்றி வெளியில் உள்ள நம்பகமான தனிநபர் நிபுணர்கள், மற்றும் அரசுகள், சிவில் சமூகம், தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பலதரப்பட்ட பங்குதாரர்களின் முயற்சிகளும் இவற்றில் அடங்கும்.



**24. மனித உரிமைகள் மீறல்களின் தாக்கத்தை எதிர்கொள்ள சாத்தியமான நடவடிக்கைளை முன்னு ரிமைப்படுத்துவதர்க்குமுன், அந்நிறுவனம் முதலில் பாதகமான தாக்கத்தை உருவாக்குவதை தடுக்க மற்றும் குறைக்க நடவடிக்கை எடுக்க தவறினால், கடுமையான பாதிப்புகளை தடுக்க முடியாமலோ அல்லது தாமதமான நடவடிக்கையால் அவற்றை சரி செய்ய முடியாமல் போகலாம்.**

## விளக்கவுரை :

ஒரு வணிக நிறுவனம், அனைத்து மனித உரிமை மீறல்களினால் ஏற்படும் தாக்கங்களை சரி செய்ய வேண்டுமென்றாலும், எப்பொழுதும் அவற்றை ஒரே சமயத்தில் சரி செய்ய முடியாது. குறிப்பிட்ட சட்ட வழிகாட்டுதல் இல்லாதபோது, அந்நிறுவனம் மனித உரிமைகள் மீறல்களின் தாக்கத்தை ஏற்படுத்தும் செயல்களை தேவையானபோது முன்னுரிமை படுத்துவதும், அதிக தாக்கத்தை உண்டாக்குவதை அங்கீகரித்து கண்டறியாவிட்டாலும், தாமதமாக செயல்பட்டாலும், அவற்றை சரிசெய்ய முடியாமல் போகலாம். இந்த சூழலில், தீவிரம் என்பது முழுமையான கருத்து அல்ல ஆனால் அந்த வணிக நிறுவனம், அடையாளம் கண்ட மற்ற மனித உரிமை தாக்கங்களில் சம்பந்தப்பட்டவை.

# III. தீர்வுகாண அணுகல்:

## A. அடிப்படை கொள்கை:

**25. வணிகம் தொடர்பான மனித உரிமை மீறல்களை பாதுகாக்க வேண்டியது ஒரு கடமையாக இருந்தாலும், அரசு தன் எல்லைக்குட்பட்ட கடமையில், சட்டம், நிர்வாகம், அரசியல் அல்லது அதிகார வரம்பிற்கு உட்பட்ட இடங்களில் ஏற்படும் மீறல்களுக்கு, தகுந்த மற்றும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான தீர்வுகளை பெறுவதற்கு வழிமுறைகளை உறுதி செய்தல்.**

### விளக்கவுரை :

தனது நாட்டில் வணிக ரீதியான மனித உரிமை மீறல்கள் ஏற்படும்போது அவற்றை விசாரித்து, தண்டனை அளித்து மற்றும் தேவையான நிவாரணம் அளிக்க அந்த அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லையென்றால், மக்களைக் காப்பாற்றுவதில் அவ்வரசு சரியாக இயங்கவில்லை அல்லது அர்த்தமற்றது என்று கருதப்படும்.

பயனுள்ள தீர்வு கிடைப்பதற்கு நடைமுறை மற்றும் அடிப்படை அம்சங்கள் இரண்டும் தேவைப்படுகிறது. இந்த பகுதியில் விளக்கப்படும் தீர்வுமுறைகளாவது முக்கிய நோக்கமான மனித உரிமைகள் மீறல்களை எதிர்கொள்வது அல்லது அவற்றிற்குரிய பரிகாரங்களை வரைமுறைபடுத்தி குறைதீர்க்கும் நோக்கம் கொண்ட வடிவங்களாக செய்வதாகும். அவ்வகை செயல்களில், வருத்தம் தெரிவித்தல், உரியவர்களிடம் திருப்பிகொடுத்தல், மன்னிப்பு கோருதல், மறுவாழ்வு, நிதி அல்லது நிதி சாரா இழப்பீடு வழங்கல் மற்றும் தண்டனை வழங்குதல் (சட்டரீதியான அல்லது நிர்வாக ரீதியான அபராதம் போன்றவை) மற்றும் தடை செய்வது அல்லது மீண்டும் அவ்வாறு ஏற்படாவண்ணம் தடை உத்திரவாதம் பெறுவது, மறுசீரமைப்பு போன்றவற்றின் மூலம் தீங்கு நேர்வதை தடுப்பது. தீர்வு வழங்குவதற்கான நடைமுறைகள், பாரபட்சமின்றி, லஞ்ச ஊழலில் மற்றும் அரசியல் செல்வாக்கு போன்றவற்றிலிருந்து, அதன் தீர்வில் தாக்கம் ஏற்படாமல் இருக்க வேண்டும்.

இந்த வழிகாட்டி கொள்கைகளுக்கான, குறை தீர்வு என்பது ஒரு தனி நபர் அல்லது குழுக்களின் அநீதிகளை உணரப்பட்டு, அதற்க்கான உரிமைகளை கோறும் விதமாக மற்றும் சட்டம், ஒப்பந்தங்கள், வெளிப்படையான / மறைமுக வாக்குறுதிகள், வழக்கமான நடைமுறை அல்லது சமூகம் சார்ந்த நியாயத்தை பற்றிய பொதுவான கருத்தின் அடிப்படையாக கொண்டு அமைந்திருத்தல். குறைதீர்க்கும் முறையாவது வழக்கமான, அரசு சார்ந்த அல்லது அரசு சாராத, நீதித்துறை சார்ந்த அல்லது சாராத முறையில் வணிகம் சார்ந்த மனித உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்ட குறைகளை குறிப்பிட்டு அதற்கான தீர்வினை வேண்டுவதாகும்.

அரசு சார்ந்த தீர்வு முறையில், அரசின் ஒரு பிரிவு அல்லது ஒரு நிறுவனம் செயல்படக்கூடும் அல்லது ஒரு தனிப்பட்ட நிறுவனம் சட்டரீதியான அல்லது அரசியலமைப்பு அடிப்படையில் செயல்படும். அவை நீதித்துறை சார்ந்த அல்லது சாராதவையாக இருக்கக்கூடும். சில தீர்வு முறைகளில், பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாக தீர்வு வேண்டி இருப்பார்கள் அல்லது அவர்கள் சார்பாக மற்றவர்கள் / இடைத்தரகர் மூலமாக, உதாரணத்திற்கு, நீதிமன்றங்கள் (சிவில் மற்றும் குற்றவியல்), தொழிலாளர் தீர்ப்பாயம், தேசிய மனித உரிமை ஆணையங்கள், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பின் பன்னாட்டு நிறுவனங்களுக்கான வழிகாட்டுதலின் கீழ் தேசிய தொடர்பு மையம், குறைதீர் அலுவலகங்கள் போன்றவர்கள் தீர்வு வேண்டி கோருவார்கள்.



வணிகம் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு உண்டான தீர்வு பெறுவதை உறுதி செய்வதற்கு அரசு, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது மற்றும் அதன் செயல்பாடுகளை புரிந்துகொள்வதற்கு உதவுவது, அவற்றை பெறும் முறை மற்றும் அவற்றிற்கான உதவிகள் (நிதி அல்லது நிபுணர்) ஆகியவற்றை ஏற்படுத்தி தீர்வுபெற உறுதி செய்வதாகும்.

அரசு சார்ந்த சட்டரீதியான அல்லது சட்டரீதி அல்லாத குறைதீர் வழிமுறைகள், ஒரு பரந்த தீர்வு ஏற்படுத்துவதற்கு அடித்தளம் அமைக்க வேண்டும். இந்த செயல்பாட்டு நிலை, குறைதீர்க்கும் அமைப்பினால், ஆரம்பநிலையிலேயே தீர்வுக்கான வழிமுறையை பெற முடியும். அரசு சார்ந்த மற்றும் செயல்முறை அளவில் குறைதீர் வழிமுறைகளை சர்வதேச மற்றும் தேசிய மனித உரிமை அமைப்புடன் ஒன்றினைந்து, கூட்டு முயற்சியுடன் செயல்படுத்தலாம். மேலும், இது தொடர்பான செயல்பாடுகளை, வழிகாட்டு நெறிமுறைகள் 26 முதல் 31 வரை வழங்கப்பட்டுள்ளது.

## B. செயல்பாட்டுக் கொள்கைகள்

### அரசு சார்ந்த நீதித்துறை செயல்பாடுகள்

**26. உள்நாட்டு நீதித்துறை வழிமுறைகளை மேற்க்கொண்டு, வணிகம் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறல்களை சீரிய முறையில் தடுப்பதற்கு அரசுகள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதில் பாதிக்கப்பட்டவர்கள் உரிய தீர்வை பெறுவதற்கு தடையாக இருக்கக்கூடிய சட்ட, நடைமுறை மற்றும் பிற சம்பந்தப்பட்ட தடைகளை குறைப்பதற்கான வழிமுறைகளை செயல்படுவதை சார்ந்து பொருந்தும்.**

### விளக்கவுரை :

பயனுள்ள சட்ட வழிமுறைகள் தீர்வு பெறுவதற்க்கான அடிப்படை தேவையாகும். வணிகம் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறல்களை அவர்களுடைய திறன் கொண்டு, சீரிய முறையில் ஆராய்வது என்பது, நடுநிலைமை, நேர்மை மற்றும் தேவையான நடைமுறைகளை அவர்கள் மேற்கொள்ளும் விதம் சார்ந்திருக்கும்.

பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உரிய அல்லது முறையான தீர்வு பெற, வேறு வழியில்லாத நிலையில், வழக்குகள் நீதிமன்றத்தை நாடுவதில் தாங்கள் தடை ஏற்படுத்தவில்லை என்பதை அரசுகள் உறுதி செய்துக்கொள்ள வேண்டும். மேலும், அவ்வழக்குகளில் சரியான நீதி அளிப்பதை லஞ்சம் மூலம் தாங்கள் தடுக்கவில்லை என்பதை அவ்வரசுகள் உறுதி செய்துக்கொள்ள வேண்டும். மேலும் நீதிமன்றங்கள், மற்ற அரசு நிறுவனங்கள் அல்லது வணிக நிறுவனங்களிடமிருந்து ஏற்படும் பொருளாதார மற்றும் அரசியல் அழுத்தங்கள் ஏற்படாமல் இருப்பதையும், மனித உரிமை காப்பாளர்களின் நியாயமான மற்றும் அமைதியான நடவடிக்கைகளை தடை செய்யாமல் இருப்பதையும் உறுதி செய்துக்கொள்ள வேண்டும்.
வணிகம் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறல்களின் மீது விசாரிப்பதில் சட்ட ரீதியான தடைகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களாவது, உதாரணத்திற்கு:

* உள்நாட்டு குற்றவியல் மற்றும் சிவில் சட்டங்கள் கீழ், ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் சட்ட பொறுப்புக்கள் எவ்வாறு பார்க்கப்படுகின்றதோ அவ்வாறே பொறுப்புக்களை சரியாக தீர்மானிப்பதை தவிர்க்க முயற்சிக்கும்போது;

* உரிமைகோருபவர்க்கு தாய் நாட்டில் நீதி மறுக்கப்படும்போதும் மற்றும் தனது வாதத்தில் உண்மைத்தன்மை இருந்தபோதும், தாய் நாட்டில் நீதிமன்றங்களை அணுக முடியாதபோது;

* பழங்குடி மக்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் போன்ற சில குழுக்கள், அவ்வரசின் பெரும்பான்மையினருக்கு, மனித உரிமைகளில் அளிக்கப்படும் அதே அளவு சட்ட பாதுகாப்பு பெறுவதிலிருந்து விலக்கப்படும்போது. சட்டத் தீர்வு காண்பதில் நடைமுறை மற்றும் செயல்முறை தடங்கல்கள் பின்வரும் சமயங்களில் ஏற்படக்கூடும், உதாரணத்திற்கு :

* தகுதியில்லாத வழக்குகளில் கோரிக்கைகளின் விலை, ஒரு பொருத்தமான நிலைக்கு மேலே சென்று அதனை அரசாங்கத்தின் துணையுடன் சரியான அளவிற்கு குறைக்க முடியாது, "சந்தை அடிப்படை" செயல்முறைகள் (வழக்கிற்கான காப்பீடு மற்றும் சட்ட கட்டண அமைப்பு போன்றவை), அல்லது மற்ற காரணங்கள்;

* உரிமைக்கோருபவருக்கு, அறிவுரை வழங்குவதற்கான வசதிகள் அல்லது வழக்கறிஞர்களுக்கு ஊக்கத்தொகை இல்லாததால், சட்ட பிரதிநிதித்துவத்தைப் பெறுவதில் சிரமப்படுகிறார்;

* கோரிக்கைகளை ஒன்றிணைப்பதற்கு அல்லது பிரதிநிதித்துவ நடவடிக்கைகளை மேற்க்கொள்ள (ஒரு குழுவின் சார்பாக செயல்படும் தனிநபரால் வழக்கு தாக்கல் செய்வது அல்லது மற்ற ஒருங்கிணைந்த நடவடிக்கை வழிமுறைகள்) போதிய வாய்ப்புக்கள் இல்லாதது, மேலும் இதனால் தனிநபர் உரிமைக்கோருபவர்க்கு பயனுள்ள தீர்ப்பு கிடைப்பதில் தடை;

* அரசு வழக்கறிஞர்களுக்கு தேவையான ஆதாரங்கள், நிபுணத்துவம் மற்றும் ஆதரவு இல்லாமல் தனி நபர் மற்றும் வணிகத்தால் ஏற்படும் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட குற்றங்களை விசாரித்து அரசின் கடமையை காப்பாற்ற முடியாதது;

இவ்வகை இடையூறுகள், வணிகம் சம்பந்தப்பட்ட மனித உரிமை கோரிக்கைகளில் ஏற்படும் சமநிலையற்ற தன்மை, உதாரணத்திற்கு, நிதி நிலைமை, தகவல் மற்றும் நிபுணத்துவம் பெறுவது போன்றவை, இல்லாத காரணத்தால் ஏற்படுகிறது. மேலும், தீவிர பாகுபாடு அல்லது திட்டமிடப்படாத விளைவுகளால் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் சட்ட செயல்பாடுகள், ஒரு குழு அல்லது மக்கள் தொகையில் உள்ள தனி நபர்கள் அதிக பாதிப்பிற்கு அல்லது ஒதுக்கப்படக்கூடிய நிலையில் அதிக கலாச்சார, சமூக, உடல் மற்றும் நிதி சார்ந்த இடையூறுகளினால், இந்த செயல்பாடுகளை பெற, பயன்படுத்த மற்றும் பயன்பெற முடியாதது. இவ்வகை குழுக்கள் அல்லது மக்கள் தொகைக்கு அவர்களது குறிப்பிட்ட தேவைகள் மற்றும் உரிமைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, சரி செய்யும் ஒவ்வொரு நிலையிலும் அணுகல், நெறிமுறைகள் மற்றும் பலன்கள் கிடைக்க செய்ய வேண்டும்.



# அரசு அடிப்படையிலான நீதித்துறை அல்லாத குறை தீர்க்கும் வழிமுறைகள்

**27. வணிகம் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பிலான குறை தீர்க்கும் வழிமுறைகளை, நீதித்துறை அல்லாத நீதித்துறை சார்ந்த வழிமுறைகளுடன், அரசுகள் பயனுள்ள மற்றும் பொருத்தமான வழிமுறைகளை அளிக்க வேண்டும்.**

## விளக்கவுரை :

நிர்வாகம், சட்டரீதியான மற்றும் நீதிக்கு புறம்பான செயல்முறைகள், சட்டரீதியாக செயல்படுவதற்கு முக்கிய பங்குவகிக்கிறது. சட்ட செயல்பாடுகள் பயனுள்ள மற்றும் நல்ல வளங்களுடன் கூடிய ஆதாரத்துடன் இருக்கும் இடங்களில் கூட, அவற்றால் அனைத்து முறைகேடுகளையும் சரி செய்யும் சுமையை ஏற்றுக்கொள்ள இயலாது; எப்பொழுதும் சட்டதிலான தீர்வு தேவையில்லை, அல்லது உரிமைகோரும் அனைவருக்கும் எப்பொழுதும் சாதகமான அணுகுமுறை என்று கூற முடியாது.

வணிகம் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு பரிகாரம் அளிப்பதில் உள்ள இடைவெளிகளை, தேவையான இடங்களில், தற்போது உள்ள சட்ட தீர்வு அல்லாத செயல்பாடுகள் மற்றும் / அல்லது புதிய செயல்பாடுகளை விரிவுபடுத்தி சரி செய்ய முடியும். இவை மத்தியஸ்தம், தீர்ப்பு அல்லது மற்ற கலாச்சாரத்திற்கு ஏற்ற மற்றும் இணக்கமான உரிமைகளைக் கொண்டதாக இருக்கலாம் அல்லது இவை அனைத்தின் சேர்கையாகவும், பிரச்சனையின் தன்மையைப் பொறுத்து, பொதுநலன் கருதி மற்றும் கட்சிகளின் தேவையை பொறுத்து இருக்கலாம். அவை சீரிய முறையில் செயல்பட கொள்கை 31 -ல் கூறப்பட்டுள்ள அளவுகோல்களை கொண்டிருக்க வேண்டும்.

# அரசு சாரா குறைதீர்க்கும் வழிமுறைகள் :

**28. வணிக நிறுவனங்களுடன் சம்மந்தமான மனித உரிமை மீறல்களுக்கு, அரசு சாரா குறைதீர்க்கும் வழிமுறைகளை எளிதாக பெறுவதற்க்கு தேவையான வழிமுறைகளை அரசுகள் ஏற்படுத்த முயல வேண்டும்.**

## விளக்கவுரை :

அரசு சாரா குறைதீர்ப்பு வழிமுறைகளின் ஒன்றாவது, வணிக நிறுவனத்தினால் மட்டுமோ அல்லது பங்குதாரர்களாலோ, ஒரு தொழில் சங்கம் அல்லது பல பங்குதாரர் குழுவால் நிர்வகிக்கப்படுவது ஆகும். அவை சட்டரீதியானதல்ல, ஆனால் தீர்ப்பு, பேச்சுவார்த்தை அடிப்படையில் அல்லது மற்ற கலாச்சார ரீதியாக சரியான மற்றும் இணக்கமான உரிமைகள் மூலம் இருக்கலாம். இந்த செயல்முறைகள், அணுகுமுறை மற்றும் நிவாரணம் பெறுவதில் விரைவாகவும், குறைந்த செலவு மற்றும் / அல்லது நாடு கடந்த அணுகல் முறையிலான நன்மைகளை தரக்கூடும்

மற்றொரு வகை, பிராந்திய மற்றும் சர்வதேச மனித உரிமை ஆணையங்களாவன. பெரும்பாலும், இவை மனித உரிமை கடமைகளில் அரசுகளின் விதிமீறல்களை விசாரிக்கின்றன. ஆனால், இவற்றில் சில வணிக நிறுவனங்களின் மனித உரிமைகள் மீறல்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்க தவறியதை விசாரிக்கின்றன.

அரசுகள், விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும், அல்லது நீதி பெறுவதற்கான சுலபமான வழிமுறைகளையும் எடுத்துறைத்து உதவலாம்.

**29. குறைகளை விரைவில் களைந்து, அதற்கான நிவாரணத்தை நேரடியாக அளிப்பதற்கு, வணிக நிறுவனங்கள் தங்களது செயல்பாட்டளவில், அதிகமாக பாதிக்கப்படும் தனி நபர் அல்லது குழுவிற்கு குறைதீர்க்கும் வழிமுறைகளை அமைத்தோ அல்லது பங்கேர்த்தோ வழிவகுக்க வேண்டும்.**

## விளக்கவுரை :

ஒரு வணிக நிறுவனத்தால், அதிக அளவு பாதிக்கப்படும் தனி நபர் அல்லது குழுவிற்கும் செயல்பாட்டளவில் குறைதீர்க்கும் வழிமுறைகளை நேரடியாக பெற முடியும். அவற்றை நிறுவனங்கள் தனியாகவோ அல்லது மற்றவர்களுடனோ, குறிப்பாக பங்குதாரர்களுடன், இணைந்தோ செயல்படுத்துகிறார்கள். அவற்றை பரஸ்பரம் ஒப்புக்கொண்ட வெளியிலிருந்து செயல்படும் நிபுணர் அல்லது நிறுவனத்தின் உதவி பெற்று செயல்படுத்தலாம். புகாரை முதலில் கொண்டு வரும் நபர் மற்ற உதவிகளை நாட வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் நேரிடையாக அந்த வணிக நிறுவனத்தை அணுகி, பிரச்சனைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை கண்டறியலாம்.

வணிக நிறுவனங்கள் மனித உரிமைகளை மதிக்க வேண்டிய பொறுப்பிற்கு, செயல்பாட்டு அளவிலான குறைதீர்க்கும் வழிமுறைகளில், இரண்டு முக்கிய செயல்களை நிகழ்த்துகிறது.

* முதலில், நிறுவனம் மேற்கொள்ளும் மனித உரிமை மீது தொடர் கண்காணிப்பில் இவை பாதகமான மனித உரிமை பாதிப்புக்களை கண்டறிய உதவுகிறது. வணிக நிறுவனத்தின் செயல்பாடுகளினால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு, தாங்கள் அவ்வாறு பாதிக்கப்பட்டதாகவோ அல்லது பாதிக்கப்படக்கூடும் என்றோ அவர்கள் நினைக்கும்போது, ஒரு வழி ஏற்படுத்தி கொடுப்பதில் இவை உறுதுணையாக நிற்கின்றன. புகார்களில் உள்ள போக்குகளை ஆராய்ந்து, தொடர்ச்சியாக ஏற்படக்கூடிய பிரச்சனைகளை வணிக நிறுவனங்கள் ஆராய்ந்து அதற்கேற்றாற்போல் அவர்களது செயல்பாடுகளை அமைத்துக்கொள்ளலாம்;

* இரண்டாவது, இந்த செயல்முறைகள் மூலம் புகார்களை தெரிந்துகொண்டுவிட்டால், அவற்றை சரி செய்வது மற்றும் பாதகமான விளைவுகளை சீக்கிரமாக நேரடியாக வணிக நிறுவனங்கள் சரி செய்வதன் மூலம் பாதிப்புகள் மற்றும் குறைகள் அதிகரிப்பதை தடுக்கலாம்.



இவ்வகை வழிமுறைகளில், ஒரு புகார் அல்லது குறை என்பது அவற்றை எடுத்துரைப்பதற்கு முன்னரே மனித உரிமை மீறல்கள் நடந்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. தீவிரமாக பாதிக்கப்படக்கூடியவர்களின் முறையான கவலைகளை அறிவதற்கு இவை குறிப்பாக பயன்படுகிறது. அவ்வகை கவலைகளை அறிந்து அவற்றை களைய முயலாவிட்டால், காலப்போக்கில் அவை மேலும் தீவிர பிரச்சனைகளாக உருமாறி மனித உரிமை மீறல்கள் மேலும் அதிகரிக்கும்.

குறைதீர்க்கும் வழிமுறையின் செயல்பாடுகள், சில அளவுகோல்களை பிரதிபலிப்பதன் மூலம் நடைமுறையில் அவற்றை சீரிய முறையில் செயல்படுவதை உறுதி செய்துக்கொள்ளலாம் (கொள்கை 31). இந்த அளவுகோல்களை, கோரிக்கைகளின் அளவு, ஆதாரம், துறை, கலாச்சாரம் மற்றும் மற்ற அளவுகளின் அடிப்படையில், பலவிதமான குறைதீர்க்கும் வழிமுறைகள் மூலம் அடைய முடியும்.

குறைதீர்க்கும் வழிமுறை செயல்பாடுகள், பரந்த அளவில் பங்குதாரர்கள் ஈடுபடுவது மற்றும் கூட்டு பேரத்தில் ஈடுபடுவது ஆகியவற்றிற்கு உறுதுணையாக இருக்கலாம். ஆனால் அவற்றிற்கு மாற்றாக இருக்க இயலாது. அவற்றை, தொழிலாளர்கள் பிரச்சனைகளை தீர்ப்பதில் ஈடுபடும் முறையான தொழிற் சங்கங்களை இந்த செயல்பாடுகள் குறைத்து மதிப்பிடக்கூடாது. மேலும், சட்ட ரீதியான அல்லது சட்டரீதியல்லாத குறைதீர்க்கும் வழிமுறைகளை இவை தவிர்க்கக்கூடாது.

**30. மனித உரிமை சம்பந்தப்பட்ட கோட்பாடுகளை மதிக்கும் தொழில் துறை, பல பங்குதாரர்கள் மற்றும் இதற கூட்டு முயற்சிகள் ஆகியவை அதற்குத் தேவையான சீரிய செயல்பாடு வழிமுறைகள் இருப்பதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும்.**

## விளக்கவுரை :

மனித உரிமை சம்பந்தப்பட்ட கோட்பாடுகள் அதிகமாக வணிக நிறுவனங்கள், பல பங்குதாரர்கள் மற்றும் இதற கூட்டு முயற்சிகள் ஆகியவற்றின் அர்ப்பணிப்பில் தெரியும். அவற்றின் நடத்தை விதிகள், செயல்திறன் தரங்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களிடையே ஏற்படுத்தப்படும் சர்வதேச கட்டமைப்பு ஒப்பந்தங்கள் மற்றும் அவற்றைப்போல பிற முயற்சிகள் ஆகியவற்றின் மூலம் அதன் தரங்களை அறியலாம்.

அவ்வகை கூட்டு முயற்சிகளில், பாதிக்கப்பட்ட நபர்கள் அல்லது அவர்களுடைய முறையான பிரதிநிதிகள், தங்களது கேள்விகளில் உள்ள நியாயங்கள் சரியாக சீரமைக்கப்படவில்லை என்று நினைக்கும்போது, அவற்றிற்கு எதிராக குரல் கொடுக்கும் உரிமையை அவர்களுக்கு அளிப்பதற்கு தேவையான வழிமுறைகள் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். இத்தகைய வழிமுறைகள் இல்லையென்றால், அவ்வகை முயற்சிகளின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிவிடும். இந்த வழிமுறைகள், கூட்டு முயற்சியில் இருக்கும் தனி நபர்கள் அல்லது வணிக நிறுவனங்களாகவும் இருக்கலாம். இந்த வழிமுறைகள் பொறுப்புக்களை ஏற்படுத்தி, மனித உரிமை மீறல்களுக்கு நிவாரணம் அளிக்க உதவ வேண்டும்.

# நீதித்துறை சாராத குறைதீர்க்கும் வழிமுறைகளுக்கு செயல்திறன் அளவுகோல்

**31. நீதித்துறை அல்லாத அரசு சார்ந்த மற்றும் அரசு சாராத குறைதீர்க்கும் வழிமுறைகள் அவற்றின் செயல்திறன் சீரிய முறையில் இருப்பதற்கு;**

(a) சட்டப்படியான: அவற்றை பயன்படுத்தப்போகும் பங்குதாரர்களிடம் நம்பிக்கை மேம்படுத்துவது மற்றும் நேர்மையான முறையில் குறைதீர்க்க பொறுப்பேற்பது;

(b) அணுகக்கூடிய: அவற்றை பயன்படுத்தப்போகும் அணைத்து பங்குதாரர்களுக்கு தெரியப்படுத்துவது மற்றும் அவற்றை அணுகுவதற்கு சிரமப்படும் நபர்களுக்கு தேவையான உதவிகளை அளிப்பது;

(c) கணிக்கக்கூடியது: ஒவ்வொரு நிலையிலும் ஏற்படக்கூடிய கால அவகாசத்தை குறிப்பிட்டு, தெளிவான, அறிந்த வழிமுறைகளை ஏற்படுத்துவது மற்றும் செயல்பாட்டு முறைகள், இருக்கும் விளைவுகள் மற்றும் கண்காணிக்கும் முறைகளை செயல்படுத்துதல் ஆகியவற்றில் தெளிவான, அறிந்த நடைமுறையை வழங்குவது;

(d) பாரபட்சமற்ற / சமமான: பாதிக்கப்பட்ட நபர்களுக்கு, நேர்மையான தகவல் அறிந்த மற்றும் மதிப்புடன் குறை தீர்க்கும் செயல்பாடுகளை நடத்துவதற்கு தேவையான தகவல்களை பெறுவதற்கு, ஆலோசனை மற்றும் நிபுணத்துவம் கிடைப்பதை உறுதி செய்துகொள்வது;

(e) வெளிப்படையான: ஒரு குறையில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அதன் முன்னேற்றத்தை வெளிப்டையாக தெரிவிப்பது மற்றும் செயல்பாடுகளின் செயல்திறனில் நம்பிக்கை ஏற்படுவதற்கு அதன் செயலாக்கத்தைப் பற்றிய தேவையான தகவல்கள் அளிப்பது மற்றும் பாதிப்பு அடையக்கூடிய எந்த பொது நலனையும் சரி செய்வது;

(f) இணக்கமான உரிமைகள்: விளைவுகள் மற்றும் தீர்வுகள் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகளின்படி இருப்பது;

(g) தொடர்ச்சியாக கற்பதற்கான ஆதாரம்: செயல்பாடுகளை மெருகேற்றி எதிர்கால குறைகள் மற்றும் ஆபத்துக்களை தடுப்பதற்கும், மற்றும் அதன் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்க்கும், ஏற்ற தேவையான வழிமுறைகளை கண்டறிவது;

**செயல்பாட்டு அளவு செயல்முறைகளில் மேலும் இருக்க வேண்டியது:**

(h) ஈடுபாடு மற்றும் பேச்சுவார்த்தைகள் மூலம்: பயன்படுத்தப்போகும் பங்குதாரர்களிடம் செயல்முறைகளின் வடிவமைப்பு மற்றும் அதன் திறன் பற்றி ஆலோசிப்பது, மற்றும் குறைகளை கண்டறிந்து அவற்றை களைய பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது;

## விளக்கவுரை :

ஒரு குறைதீர்க்கும் வழிமுறையாவது, அதனைப் பயன்படுத்துபவருக்கு அவற்றை பற்றி அறிந்து, நம்பிக்கை கொண்டு பயன்படுத்த முடிந்தால் மட்டுமே அதன் நோக்கம் நிறைவேறும். இந்த தரவுகள், அவற்றை வடிவமைக்க, திருத்தம் செய்ய மற்றும் சட்டரீதியல்லாத குறைதீர்க்கும் வழிமுறைகள், நடைமுறையில் பயனுள்ளதாக இருப்பதை உறுதி செய்வதற்கு / மதிப்பீட அளவுகோல் அளிக்கிறது. சுமாராக வடிவமைக்கப்பட்ட அல்லது செயல்படுத்தப்பட்ட குறைதீர் வழிமுறைகளினால், பாதிக்கப்பட்ட நபர்களின் உரிமைகள் பறிக்கப்படுவது மற்றும் அவர்களை அவமரியாதை செய்வது ஆகிய குறைகளை அவர்களுக்கு அதிகரிக்க செய்யும்.

முதல் ஏழு அளவுகோள்கள், அரசு சார்ந்த அல்லது சாராத தீர்ப்பு மற்றும் பேச்சுவார்த்தை முறைகளுக்கு பொருந்தும் .எட்டாவது அளவுகோல், வணிக  நிறுவனங்கள் நடைமுறைப்படுத்த உதவும் குறிப்பிட்ட செயல்பாட்டு வழிமுறைகளுக்கு பொருந்தும்.



“குறைதீர் வழிமுறைகள்” என்பது இங்கே ஒரு கலையாக பயன்படுத்தப்படுகிறது. இந்த வார்த்தை எப்பொழுதும், சில குறிப்பிட்ட செயல்முறைகளுக்கு உகந்ததாகவோ அல்லது உதவியாகவோ இல்லாதபோதும், அவை செயல்திறன் மாறாமல் இருக்கும். ஆனால் அதன் செயல்திறன் அளவுகோல் மாறாமல் இருக்கும். குறிப்பிட்ட அளவுகோல் என்பதன் விளக்கவுரை பின் வருமாறு :

(a) ஒரு செயல்முறையை பயன்படுத்த விரும்பினால், அதன் பயனீட்டாளர்கள் அந்த முறையை நம்ப வேண்டும். குறை தீர்க்கும் நடைமுறையில் சம்பந்தப்பட்ட தரப்பினர், அது நேர்மையாக நடைபெறுவதில் தலையிடாமல் இருப்பதை உறுதி செய்யும் பொறுப்பு என்பது, பயனீட்டாளர்களுக்கு அந்த நடைமுறையில் நம்பிக்கை அளிக்கும் ஒரு வழியாகும்;

(b) அதனை அடைவதில் தடைகள் என்பது, அந்த செயல்பாட்டினை பற்றிய விழிப்புணர்வின்மை, மொழி, எழுத்தறிவு, செலவுகள், இருப்பிடம், மற்றும் பழிவாங்கள் பயம் ஆகியவை;

(c) ஒரு செயல்பாட்டினை நம்பி பயன்படுத்துவதற்கு, அதன் செயன்முறைகளை பற்றிய வெளிப்படையான தகவல்கள் தேவை. முடிந்த அளவு ஒவ்வொரு நிலையிலும் சமயத்திற்கேற்ற நெகிழ்வுத்தன்மையும் தேவைப்படும் என்பதால் அதற்க்கான கால அளவை கடைபிடிக்க வேண்டும்.

(d) வணிக நிறுவனங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களிடையே ஏற்படும் குறைகள் மற்றும் மோதல்களில், பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அவர்களால் அதிக பணம் செலவழிக்க முடியாததால், தகவல்களை அறியும் வாய்ப்பு மற்றும் நிபுணர்களை நாடும் வாய்ப்பு குறைவாக இருக்கும். இந்த ஏற்றத்தாழ்வை சரி செய்யாவிடின், ஒரு நேர்மையான அணுகுமுறையின் பயன் மற்றும் செயலை குறைத்து, மற்றும் நீண்ட கால தீர்வு பெறுவது கடினமாகும்.

(e) சம்பந்தப்பட்ட கட்சிகளுடன் தனி நபரின் குறைகளில் ஏற்படும் முன்னேற்றத்தை தொடர்ந்து கருத்து பரிமாற்றம் செய்வது, அந்த நடைமுறையில் நம்பிக்கையை நிலைநிறுத்த உதவும். செயல்முறையின் செயல்பாடுகளை பற்றிய வெளிப்படைத்தன்மையை அதிக பயனீட்டாளர்களுக்கு, புள்ளி விவரம், வழக்கு ஆய்வுகள் அல்லது சில வழக்குகளை கையாளுவதைப் பற்றிய விரிவான தகவல்கள் மூலம் தெரிவித்து அதன் உண்மைத்தன்மையை உணர்த்தி, அதிக நம்பிக்கை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றும். அதே சமயம், சம்பந்தப்பட்ட கட்சிகளுடனான உரையாடல்கள் மற்றும் தனி நபர் அடையாளங்களின் ரகசியம் தேவையான இடங்களில் காக்கப்பட வேண்டும்;

(f) பொதுவாக மனித உரிமைகள் அடிப்படையில் குறைகள் தெரிவிக்கப்படுவதில்லை மற்றும் பலரும் ஆரம்ப கட்டத்தில் மனித உரிமை மீறல் பற்றிய பயத்தை வெளிப்படுத்துவதில்லை. அதன் விளைவுகளில் மனித உரிமைகள் தாக்கம் சம்பந்தப்பட்டிருந்தால், அவை சர்வதேச அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளின்படி இருப்பதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும்;

(g) குறைகள் நடக்கும் கால அளவு, முறைகள் மற்றும் காரணங்களை தொடர்ந்து ஆராய்வதன் மூலம் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தினால் அவற்றை அறிந்து, கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளில் அதன் தாக்கத்தை புகுத்தி எதிர்காலத்தில் தீங்கு நேரா வண்ணம் மாற்ற முடியும்;

(h) குறை தீர்க்கும் வழிமுறை செயல்பாடுகளுக்காக, அவற்றின் வடிவம் மற்றும் செயல்திறனை தீர்மானிப்பதில் பாதிக்கப்பட்ட நபர்கள் குழுவை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற, நடைமுறையில் அவர்கள் அதனை பயன்படுத்த மற்றும் அவற்றின் வெற்றியில் ஒரு பகிர்ந்தளிக்கப்பட்ட ஆர்வம் இருப்பதை உறுதி செய்ய முடியும்.  சட்டத்திற்கு உட்பட்டு, ஒரு வணிக நிறுவனத்தால், ஒரே சமயத்தில் குறைகளின் காரணமாகவும், அதே சமயம் தன்னிச்சையாகவும் அதன் தாக்கத்தை தீர்மானிக்கவும் முடியாது என்பதால், இந்த செயல்முறைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணும் குறிக்கோளோடு செயல்பட வேண்டும். தீர்ப்பு தேவைப்படும் இடங்களில், அவற்றை முறையான, தனிப்பட்ட மூன்றாம் தரப்பினர் முறை மூலம் அளிக்க வேண்டும்.

